வடமொழிக் கவிசிங்கமாகிய

# காளிதாச சரித்திரம்.

இது,

யாழ்ப்பாணத்து

மானிப்பாய்

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையால்

தமிழிலே கத்தியரூபமாக

மொழிபெயர்க்கப்பட்டது.

நான்காம்பதிப்பு.

PRINTED AT THE

NAVALAR PRESS, JAFFNA.

**1936.**

*Registered Copy Right.*

338

உ

பரமபதிதுணை.

வடமொழிக் கவிசிங்கமாகிய

# காளிதாச சரித்திரம்.

இது,

யாழ்ப்பாணத்து

மானிப்பாய்

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையால்

தமிழிலே கத்தியரூபமாக

மொழிபெயர்க்கப்பட்டது.

நான்காம்பதிப்பு.

PRINTED AT THE

NAVALAR PRESS, JAFFNA.

1932.

*Registered Copy Right.*

# முகவுரை.

காலந்தோறும் நிகழும் சம்பவ விசேஷங்களைக் கண்கூடாகக் கண்டு
கேட்டறிந்தேனும், நிகழாதவொன்றை ஓரொரு காரியார்த்தமாக நிகழ்ந்த
தாகப் பாவித்தேனும் எடுத்துக்கூறும் அவற்றது வரலாறே சரித்திரமெனப்
படும். ஆகவே சரித்திரம் சம்பவசரித்திரமெனவும், அசம்பவசரித்திர
மெனவும் இருவகைப்படும். இரண்டும் பயனளவில் ஒன்றற்கொன்று
சமமேயாயினும், சம்பவசரித்திரம் மெய்ம்மையாக நிகழ்ந்ததொரு வரலா
றென் றுணரக்கிடப்பதாதலின், மற்றதனிலும் இஃது உள்ளத்தின்கண்
விசேஷ கிளர்ச்சியை உண்டாக்கும் தரத்தது.

அற்றேல் சரித்திரத்தாலெய்தப்படும் பயன் யாதோவென்னில், அத
னைக் கற்றல் கேட்டல்களா லுணர்வோர் உள்ளக்கிளர்வுடையராகி அது
கூறும் நெறிவழிச் செல்ல முயலுதல், சமயம் வாய்ப்புழித் தமக்கு நவீன
உத்தி கிளராதேனும் தாம் கற்றுக் கேட்டறிந்த பழைய உத்திகளைப் பிர
யோகித்து வெற்றிபெறுதல், அச்சரித்திரத்து விஷயங்களை உதாரணங்
களாகக்கொண்டு பலவேறு துறைப்பட்ட முயற்சிகளி லொன்றைக் கைப்
பற்றிச் சாதிக்கத் துணிதல் என்றின்னோரன்ன பயன்களேயாமென்க.
மனத்துயருற்று வருந்துவோரும் சரித்திரங்களைக் கற்றல் கேட்டல்களின்
வசமாவரென்றால் பின்னர் அதன் மாட்சியைக் கூறவும் வேண்டுமோ! சரித்
திரத்திலே, மிக்க பக்தியுடையோர், மிக்க நற்குண நற்செய்கைகளுடை
யோர், மிக்க கல்வி விவேகம் சாதுரியம் முதலியனவுடையோர், மிக்க வீர
முடையோர், மிக்க கொடையுடையோர் முதலியோரெல்லாம் எடுத்து
வியந்து கூறப்படுவதுமன்றி, கொலை களவாதி பாதகங்களை யியற்றுபவ
ராகிய மிக்க தீயரும் எடுத்துக்கூறி யிகழப்படுதலுமுண்டு. ஆதலால் சரித்
திரம் அழியாததொரு சாசனமெனற்பாலது.

மேற்கூறிப்போந்த முறையானே இச்சரித்திரம், எவ்வெப் பாஷையி
னும் சிறந்த தெய்வபாஷையாம் சமஸ்கிருத பாஷாசமுத்திரத்தைத் தமது
இருதயகலசத்தடக்கி இறுமாந்து நின்றவனும், வடமொழிக்கடலை அலை
வறப்பருகி வந்தோமென நின்ற கவிவாணர்க்கு, நீவிர் பருகியது எங்ஙனம்,
இதோவிருக்கின்றதே எனதிருதயகலசத்திலென் றெடுத்துக்காட்டி அவர்
களையெல்லாம் புறங்கண்டு தன்னைக் கவிசிங்கமென நாட்டி இராஜாதிராஜ
ரால் வணங்கப்பெற்றவனுமாகிய காளிதாசனது வரலாற்றையும், அவனு
லியற்றப்பட்ட அதிமாதுரியமான கவிதைகளுட் சிலவற்றையும் எடுத்துக்
கூறுவது. இச்சரித்திரம் வடமொழியிலே காளிதாசனுக்கு உற்ற நண்பனும்
இராசசிரோன்மணியும், வித்துவ சிரேஷ்டனுமாகிய போஜராஜனாலே,
செய்யப்பட்டது. அதனை நாம் கேட்டல்வேண்டுமெனக் கொண்டிருந்த

## முகவுரை.

பேரவாவுக்கு எல்லைதந்தார் அந்தணர் குலதிலகராகிய காரைக்கால் இராமசுவாமி சாஸ்திரியார். அவர்பால் நாம் சென்று கேட்டற்கு ஒவ்வாமையுற்ற ஒவ்வோரமையத்தி லெமக்கிடாகப் போந்து கேட்டு எழுதிவந்து சகாயம் புரிந்தார் சுரைக்குடியென்னு மூரின்கண் வாழும் பஞ்சநாதஐயர் என்பார். ஆயிரத்தெண்ணூற் றெண்பத்தொன்பதாம் ஆண்டிலே இந்நூலின் இரண்டாம்பதிப்பை வெளிப்படுத்தினேம். பிரதிகளெல்லாம் விரைந்து விலைபோயினமையின், இம்மூன்றாம்பதிப்பை வெளிப்படுத்துகின்றேம். இதிலே முதலாம் இரண்டாம் பதிப்புகளிலமைக்கப்படாதன சில நவீனமாகச் சேர்க்கப்பட்டன.

இந்நூலினுள்ளே இடையிடையே வரும் சுலோகங்கள் தமிழிலே வரையப்பட்டுக் கிடத்தலின் அவை ஸமஸ்கிருத உச்சாரணத்துக்கு முரணாமேனும், அவற்றை வல்லார் இயைய வாசித்துப் பொருள்கொள்ளுவரென்னும் கருத்துற்றே அங்ஙனம் செய்தேம்.

மாணிக்கம் முரணாகிய பரற்கல்லைப்போன்று மாசுடன் கைப்படுவதாயினும் அது தவிர்க்கப்படாமைபோல, இச்சிறு நூலையும் மாசுளதேல் அம்மாசை நீக்கிக் கையாளுவது பெரியோர் கடன்.

இங்ஙனம்,

ஆ. மு.

இதன் ஆக்கியோன் ஸ்ரீமான் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை காலஞ்சென்றும் 15 வருஷங் கழிந்தன. பலரும் இக்காளிதாசசரித்திரத்தை படிக்க விரும்பி விண்ணப்பஞ் செய்தமையால் பிரதிகள் கைவசமில்லாமையால் மறுபடியும் இதன் நான்காம்பதிப்பைப் பதிக்கலானேம்.

நாவலர் கோட்டம்,
வண்ணார்பண்ணை,
28-4-32.

இங்ஙனம்,

க. வைத்தியலிங்கம்.

உ

பரமபதிதுணை.

# காளிதாச சரித்திரம்.

திருமகளும் நாமகளும் பண்டுதொட்டு மகிழ்ந்து தமதுறைவிடமாகக் கொள்ளப்பெற்றுள்ள இப்பரதகண்டத்திலே, மகிஷவென்னும் நாட்டிலே மகிஷபுரியிலே, மாகேந்திரனென்னும் அரசன் ஒருவன் செங்கோலோச்சி வருவானாயினன். அவனும் அவன் தேவி அன்னபூரணியென்பவளு மியற்றிய அருந்தவப் பயனாக அழகெலாந் திரண்டொரு வடிவெடுத்தாலொப்ப ஒரு புத்திரி உற்பவமாயினள். அப்புத்திரியை அவன் கண்மணிபோலப் பரிபாலித்து, ஏற்றகாலத்திலே கல்வி கேள்விகளிலும் படைக்கலப் பயிற்சியிலும் அவளுக்கிணை உலகத்தில் மற்றெவருமில்லை என்று யாவரும் பாராட்டும்வண்ணம் வல்லவளாக்கி வித்தியாகுரோசமென நாமகரணமுஞ் செய்து, அவளை, அவளுடன் கல்வி கேள்வி முதலியவற்றில் வாதாடி வெல்லுவோர்க்கே மணமுடித்துக் கொடுப்பேன் என்று நாடெங்கும் முரசறைவித்தான்.

முரசொலிகேட்ட கவிவாணரும் அரசரும் காமுகரும் என்னுமிவ்வரிசையோர் தத்தம் இஷ்டதேவதைகளை வழிபட்டு நாட்பார்த்து, நன்னிமித்தம் ஓர்ந்து, தத்தம் பதிகளைவிடுத்துப் புறப்பட்டு மகிஷபுரியை யடைந்து, தனித்தனியே அவளுடைய சமுகஞ்சென்று, வாதாடி வெள்கி ஒருவர்பின் ஒருவராய் அகல்வாரும், அவளுடைய கட்டழகை நினைந்துருகி அவள் முகதரிசனமே பெரும் போகமென வேணவாவுற்று அந்நகரிற்றானே குடிகோலுவாருமாயினர். இப்படி நாட்பல கழிந்தபின்னர், அரசனும் கவலைமிக்கவனாகி, "இனி நம் புத்திரியை மணம்புகுத்தாது வைத்திருப்பது நன்றன்று; அவளுமோ பன்னீராட்டைப் பருவத்தளாயினள். எண்ணில்லாத அரசரும் கவிவாணரும் வந்து வாதாடி அவளுக்குத் தோற்று

வெள்கி அகன்றூர்கள். இனி அவளை வதுவைசெய்யத்தக்க வல்லவர் உலகத்தில் யாவர் இருக்கின்றூர். இதற்கு யாது கூறுகின்றூய்? மந்திரீ!" என்று தனது முதல்மந்திரியாகிய ஆத்மரக்ஷகன் என்னும் மந்திரியுடன் சூழ்ச்சிசெய்வானுயினன். இதற்கிடையில், முன்னர் அவளுடன் வாதஞ்செய் தாற்றுதோடிப்போன கவிவாணர் சிலர் ஒருங்குகூடி, "நம்மையும் இன்னும் எண்ணில்லாத அரசர் கவிவாணர் முதலியோரையும் அவமானஞ்செய்து புறத்தே தள்ளிவிட்ட இராஜகுமாரியை வஞ்சச்சூதினுல் அவமானஞ் செய்யேமாகில் நாம் ஆண்மக்களாய்ப் பிறந்தும் பயனில்லாதவராவேம். ஆதலால் அங்ஙனஞ்செய்ய ஓர் உபாயம் எடுப்போமாக" என்று ஒரு நவீன சூழ்ச்சிசெய்து, அதற்குக் கருவியாக ஒருவனைத் தேடிப் புறப்பட்டார்கள்.

அங்ஙனம் புறப்பட்டுப் போகையில், அரிகரபுரத்திலேயுள்ள அநந்தநாராயண ஐயன் என்பானுக்குப் புத்திரனும், குல தருமத்துக்கேற்ற வேதாத்தியயனத்துக்கு யோக்கிய னல்லனென்று அவன் மௌட்டிககாரணமாக நீக்கப்பட்டு அவ்வூராருடைய ஆடுகளை மேய்த்து வரும்படி நியோகிக்கப்பட்டவனுமாகிய அரிகரஐயன் என்பவன், தனது மந்தைக்கு உணவின்பொருட்டு ஒரு மரக்கொம்பின்மேலேறி நுனியிலிருந்து அதன் அடியை வெட்டிக்கொண்டிருக்கக்கண்டு மகிழ்ந்து, இம்மூடதிலகனே நமது கருத்தை நிறைவேற்றற்குத் தகுந்த கருவியாவான் என்று மதித்து. அவனை அணுகி அழைத்துக்கொண்டு தம்முள் ஒருவனுடைய கிருகத்தைச் சேர்ந்து, அங்கே, அவனை உயர்ந்த பரிமள தைலமிட்டு நீராட்டி, நல்ல போசனமருத்தி, சளபகஸ்தூரிகளை அணிவித்து ஆடையாபரணலங்கிருதனுக்கி, யார் என்ன கேட்கினும் என்னசெய்யினும் சமிக்கைகளாலன்றி, வாயைத்திறந்து யாதும் சொல்லாதிருக்கும்படி உடன்படுத்தி, ஒரு சிவிகையில் ஏற்றித் தாமே சுமந்துகொண்டு இராஜசமுகஞ் சேர்ந்தார்கள். இதைக்கண்ட வாயிலாளர் அரசனிடஞ்சென்று வித்துவான்களது வரவைத் தெரிவித்தலும், அரசன் மிக்க மகிழ்ச்சியுடையனுகிச் சபாமண்டபம் புக்கு, வித்துவான்கள் எல்லோரையும் உபசரித்து ஆசனத்திருத்தி, தனது குமாரிக்குச் செய்திபோக்கினன். அவளும் காலந்தாழ்க்காது எழுந்து ஆடையாபரணு லங்கிர்தையாகிச் சபாமண்டபம் புகுந்து தந்தையையும்

ஏனைய பெரியோரையும் வணங்கி நின்றாள். வணங்கிநின்ற புத்திரியை அரசன் பார்த்து, "எனதன்பிற் சிறந்த புத்திரீ! இங்கே இவ்வித்துவகுழாத்தின் மத்தியிலே வீற்றிருக்கு மிப்புருஷோத்தமர் கலாசமுத்திர மெனத்தக்கவரும், இவ்வித்துவ கணத்திற்கெல்லாம் குருவுமா யுள்ளவராம்; அவர் இன்றைக்குன்னுடன் வாதாடி உன்னை வென்று மணமுடிக்கக் கருதி வந்திருக்கின்றனர். இஃதுணர்த்துமாறே ஈண்டுன்னை வருவித்தேன்" என்றுரைத்தான். அதுகேட்ட வித்தியாகுரோசம் என்னுமந் நங்கை குறுமுறுவல் செய்து அவர் மௌனி என்பதை முன்னரே உணர்ந்துகொண்டவளாசையால் அவருடன் சமிக்கைகளால் வாதாட நிச்சயித்து, பிரபஞ்சகாரணம் ஒன்றே என்னுங் குறிப்புத் தோன்ற, ஒரு விரலைக் காட்டினாள். அதுகண்ட ஐயன் யாதுகருதியோ இருவிரலைக் காட்டினான். இதன் பொருளைப் பக்கத்திலிருந்த வித்துவான்கள் எல்லோரும், விரித்துரைத்து மேற்கோள்காட்டி உலககாரணம் இரண்டென்று சுவபக்ஷஸ்தாபனமும் பரபக்ஷகண்டனமும் செய்தார்கள். அதற்கு அந்நங்கையும் சம்மதித்தவளாகி, சங்கேதப்படி அவனுக்கு மாலையிட உடன்பட்டாள். தனது புத்திரி மணத்துக்கியைந்தமையைக் கண்ட அரசன் ஆனந்தோததியில் மூழ்கினவனாய், கல்யாணோற்சவத்துக்கு வேண்டுவனவெல்லாஞ் செய்வித்து அதிசம்பிரபமாக இருவருக்கும் மணம் முற்றுவித்தான்.

அன்றிரவு, இந்திரசயன மண்டபமெனத்தகும் அலங்காரமான பள்ளியறைக்கு மணமகன் எழுந்துபோய், அங்கேயுள்ள விநோதங்களையெல்லாங் கண்டு மருள்கொண்டு பிரமித்துச் சிறிதுநேரம் யாது செயற்பாலது என்று ஆலோசித்து நின்றான். அதுகண்ட தோழிகள் மணமகனுக்கென்று நவீனமாக அமைக்கப்பட்டுள்ள அம்சதூளிகாமஞ்சத்தைச் சுட்டிக்காட்டி அதிற்போய்ச் சயனிக்குமாறு சொற்றனர். அவ்வாறே மணமகனும் அம்மஞ்சத்திலேறிப் படுத்து, அவ்வகைச் சுகமான படுக்கையை எந்நாளிலும் கண்டுகேட்டறியாதவனாதலால், சடிதியில் பிரஞ்ஞையற்றான் போன்று ஆழ்ந்து நித்திரைபோயினன். இதற்கிடையில், அங்கே அந்தப்புரத்திலிருந்த மணமகள் ஆடையாபரணா லங்கிருதையாகிச் சந்தனபுஷ்பாதிகளணிந்து, இரத்தினங்கள் இழைத்த தங்கத்தட்டுகளில் அதிமாதுரியமான சிற்றுண்டிகளைத் தாதிகளேந்தி நான்மருங்குந் தன்னைச்

சூழ்ந்து செல்லப் பள்ளியறை போயினள். அங்கே கணவன் துயில் செய்வதைக்கண்டு, வீணையையெடுத்து மெல்ல மீட்டினுள். அதற்கு அவன் விழிக்காதுகண்டு மீண்டும் சிறிதுநேரம் கரத்தோடு பொறித்தாள். அதற்குமவன் எழுந்திராமையைக் கண்டு வீணையோடு பொருந்த இனிய கீதங்களைப் பாடினுள். அதனுலும் அவன் நித்திரை தெளிந்திலன்; அப்பால் பாடலை ஒழித்துவிட்டு, தாம்பூலந்தரித்துத் தம்பலத்தை அவனுடைய வாயில் உமிழ்ந்தாள். அதனுல் நித்திரை சற்றே தெளிந்தவனுகி, தான் மணமகனுயிருப்பதை மறந்து, தான் ஆட்டுக்கூட்டத்தருகில் படுத்திருக்கும் வழக்கத்தை எண்ணி, ஆடுகளன்ரே தனது வாயில் மலங்கழிக்கின்றனவென நினைந்து, தூ! தூ! மூதேவி ஆடே எனப்பிதற்றி விழித்தான்.

இம்மொழிகள் புண்ணில் வேல் நுழைந்தாலொப்ப இராஜகுமாரியினது செவியிற் புகுதலும், இராஜகுமாரி மிகுந்த சினங்கொண்டு துணுக்கென ஒரு வாளாயுதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, அவனை அதட்டி எழுப்பி, "நீ யாவன்? உன் வரலாறென்னை? உள்ளபடி சொல்; அன்றேல் இக்கட்கத்தால் உன்னைத் துணிப்பேன்" என்ன, ஏழையாகிய அவ்வையன், நடுநடுங்கித் தைரியங்குன்றி, உடல்பொன்றி, நாக்குழறி, சாஷ்டாங்கமாக அவள் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து அஞ்சலியஸ்தனுய் நின்று, "தாயே, நான் அரிகரபுரத்திலேயுள்ள அநந்தநாராயண ஐயனுக்குப் புத்திரன்; என்பெயர் அரிகரன்; தந்தை முதலியோர் எனது மௌட்டிக காரணமாக என்னை ஆடுமேய்க்கும் தொழிற்கே யோக்கியன் என்று அத்தொழிற்கு உரியவனுக்கினர்; அதுவே என் தொழில்; இன்றுகாலையில் நான் ஆடுமேய்த்துக்கொண்டிருக்கையில் என்னை வித்துவான்கள் சிலர் வந்து பிடித்துக்கொண்டுபோய் அலங்கரித்து யார் என்ன கேட்கினும் வாயினுல் யாதும் பேசாதிருக்குமாறு உடன்படுத்தி ஒரு சிவிகையிலேற்றி, இங்கே கொண்டு வந்தார்கள். அதன்பின்னர் நிகழ்ந்தவைகளை நீயே யறிவையன்ரே; இதுவே என் வரலாறு; என்னைக் கொல்வது தருமமன்று; நான் யாதுமறியேன்" என்று கூறினுன்.

இவைகளைக் கேட்ட அரசகுமாரி குஞ்சிரிப்புக்கொண்டு, வாளைத் தூரத்தே வீசிவிட்டு, அவனை அஞ்சாதிரு என்று தேற்றி,

அவன் தெளிந்தபின்னர், அவனைப்பார்த்து, "ஓ! பிராமணா! இவ்வூருக்கு மேற்றிசையிலே புவனேஸ்வரி ஆலயமொன்றிருக்கின்றது. அங்கே நீ இப்போதுதானே சென்று கோயிலினுள் நுழைந்து கபாடபந்தனம் பண்ணிக்கொள்ளு. சிறிது நேரத்தின்மேல், புவனேஸ்வரி வந்து கதவைத் தட்டுவாள். நீ திறப்பதில்லை என்று கூறு. காரணம் யாது என்பாள். பீஜாக்ஷரத்தை நின் கைச்சூலத்தால் இக்கதவின் புழைவழியாக என் நாவில் பொறிக்கவும் என்னை என்றுங் காக்கவும் உடன்படுவையேல் திறப்பேன் என்று கூறு. அதற்கவள் உடன்பட்டு அவ்வாறு முடிப்பாள். அதன்மேல், கதவைத்திற" என்று கூறினான். அவனும் அதுகேட்டு மகிழ்ந்து, குறிக்கப்பட்ட வழியேசென்று கோயிலிலே நுழைந்து புவனேஸ்வரியினது அருள்பெற்றுக்கொண்டு உடனே திரும்பி அந்தப்புரம் வந்து பள்ளியறைக் கதவிற்றட்டி இராசகுமாரியை அழைத்தான். அரசகுமாரி விழித்து, நூதனக்குரலொலி கேட்கப்படுகின்றதே இஃதேது என்னுங் கருத்துள்ள "வாக்விசேஷஃ கிஃபடதி" என்னும் வாக்கியத்தைச் சொல்லிக்கொண்டு கதவைத் திறந்தாள். மேககுலமெழுந்து கருப்பஞ்சாற்றுக் கடலினிடமாகச் சென்று படிந்து கருப்பஞ்சாற்றை ஆரமுகந்து மீண்டுவந்து முழங்கி நின்றாற்போன்று நின்ற ஐயன்செவியில் அச்சொற்கள் படுதலும், ஐயன் புளகங்கொண்டு கருப்பஞ்சாற்று மழைவிடாது பொழிந்தாலொப்பப் பொழிந்த அத்தியற்புத கவிமழையால் இரகுவமிசம், மேகசந்தேசம், குமாரசம்பவம் என்னும் நூல்களாகிய ஜலாதாரங்கள் மூன்றும் விடியுமுன் நிறைந்து தேங்கின. இவைகளைக்கண்ட இராசகுமாரி சொல்லற்கரிய மகிழ்ச்சி கூர்ந்தவளாகியும், அவன் தன்னைத் தாயே என்றுகூவிக் காலில்விழுந்து பணிந்த காரணத்தால் தான் அவனை நாயகனாகக்கொண்டு சுகிக்கக்கூடாமையை நினைந்து வியசனமுற்று, அவனைப்பார்த்து, "உன்னை நான் நாயகனாக வரித்தேன். அப்பால் நின்வாயினின்றும் எழுந்த துஷ்டவாசக காரணமாக உன்னைக் கொல்லுதற்கு முயன்றேன். நீ உண்மையைக் கூறித் தாயே என முறைகொண்டு விளித்து என்பாதத்தில் வீழ்ந்தனை. அதனால் உன்னைச் சேருவது தகுதியன்று. ஆகையால் இன்றுமுதலாக நீ காளிதாசனெனப் பெயர்புனைந்து எங்கும் விளங்கி இராசபூச்சியதை

யுடையனுக வாழ்க" என்று ஆசிகூறி அவனை அனுப்பினள். அவன் போனபின்னர் அரசகுமாரி புவனேஸ்வரியினது ஆலயத்தை யடைந்து அத்தேவியை வணங்கி அவளருளால் தாசிவடிவம் பெற்றுப் போஜராசனுடைய நகரஞ்சென்று, காளிதாசனைச்சேர்ந்து சுகிக்கும் கருத்துடையளாகி அங்கே வாசம்பண்ணுவாளாயினள்.

இவளிங்ஙனமாக, அங்கே இவளிடத்தி லனுமதிபெற்றுப் போன காளிதாசன் சிலகாலமாகத் தேசசஞ்சாரஞ்செய்து அங்கெல்லாம் தன்னைக் கவிசிங்கமென நாட்டிப் பெயர்படைத்து, ஈற்றில், ஆங்காங்கும் பரிசாகப்பெற்ற யானை, குதிரை, சிவிகை, குடை, கொடி, ஆலவட்டம், சாமரம், பரிசனங்கள் முதலியன சூழ, ஓர் யானைமேலேறி, வாச்சியங்களொலிசெய்யத் தாராநகரஞ்சேர்ந்து போசனுடைய அவைக்களம் புகுந்தான்.

அவ்வேளையில், போசராசன் பூஜாமண்டபத்திலே பூசைபுரிவானுயினுன். சபாமண்டபத்திலே வித்துவான்கள் மாத்திரமிருந்தார்கள். காளிதாசன் தான் புகுந்திருப்பது அரசனுடைய சபா மண்டபமாயிற்றே யென்பதைச் சிறிதும் சிந்தியாமல் உத்தண்ட நடையுடையனுய்ச் சபைநடுவே சென்றுன். அதுகண்ட வித்துவான்கள் சிங்கத்தைக்கண்ட யானைக்குழாம்போலத் திகைத்தெழுந்து நின்றுர்கள். காளிதாசன் அவர்களை உட்காரும்படி செய்து தானுமோராசனத்திலே வீற்றிருந்து, அவர்களுக்கெல்லாம் தானே தாம்பூலங்கொடுத்துத் தானும் தாம்பூலந்தரித்துக்கொண்டு அவர்களுடன் அளாவுவானுயினுன். அப்போது வித்துவான்களெல்லோரும், அன்று காலையில் அரசன் சங்கரகவி யென்பானெருவனுக்குப் பாத்திராபாத்திரம் நோக்காது பன்னிரண்டு லக்ஷம் பொன் கொடுத்ததைப்பற்றிக் குறைகூறி முறையிட்டார்கள். காளிதாசன் அதனைக்கேட்டு நகைத்து, "நீங்கள் அதன்பொருட்டு விசனப்படுவது அறியாமை; எங்ஙனமென்பீராயின், அரசன் சங்கரகவிக்குப் பரிசாகக் கொடுத்தது ஓரிலக்ஷமே. அப்பால் அரசன்செய்வது ஸ்ரீசங்கரன் பூசையாதலின் அப்பெயர்தரித்து அப்பூஜாகாலத்தில் வந்தமையால் நாமவிசேஷம்பற்றியும், பூஜாகாலத்திலே உருத்திருக்குத் தானஞ்செய்வது கடனுதலாலும் பன்னேருருத்திரர்க்கும் தனித்தனி ஓரிலக்ஷமாகச் சங்கற்பித்துப் பன்னேரிலக்ஷமுமாகப்

பன்னிரண்டிலக்ஷம் பொன் அக்கவிக்குக் கொடுத்தவாறு காண்க" என்றான். இதைக்கேட்ட வித்துவக்குழாம் காளிதாசனுடைய சாதுரியத்தையும் அரசனுடைய விவேகத்தையும் தங்கள் அறியாமையையுங் கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் வெட்கமும் அடைந்தவராய் மேற்கூறத்தக்கது யாதெனத் தெளியாது மயங்கியிருந்தார்கள். இதற்கிடையில் போசராசனும் பூசையை முடித்துக்கொண்டு அந்தப்புரஞ்சென்று மீண்டுவரும்போது காளிதாசன் சொன்ன சமாதானம் செவியிற் பட்டது. பட்டமாத்திரத்தில், அரசன் ஆச்சரியவசத்தனாய்த் தனது அகக்கருத்தை உள்ளபடி அறிந்துசொன்ன இவன், நரன்றானோ? அன்றி ஈசனோ? என ஐயமுற்றுச் சிறிது நேரம் ஸ்தம்பித்துநின்று, ஈற்றில், அவனைப் பார்க்கவேண்டுமென்று அவாவுற்று விரைந்து சபையிற் புகுந்தான். அரசனைக் கண்ட காளிதாசனும் மகிழ்ந்து மங்கள ஆசிகூறினான்

அரசன் காளிதாசனைக் கண்டமாத்திரத்தில் சொல்லுதற்கரிய பெருமகிழ்ச்சியில் முழுகிப் பரவசப்பட்டு நின்றமையால் பிரதிவந்தனஞ்செய்ய மறந்து, நெடுநாட் பிரிந்திருந்த காதலி தனது நாயகனை ஆவலோடுங் கையைப்பிணித்து இழுத்துச் செல்வதுபோலத் தனது கரங்களால் அவன்கரத்தைப் பிடித்து அழைத்துக்கொண்டு அந்தப்புரஞ்சேர்ந்து அங்கே காளிதாசனை ஓர் ஆசனத்திலிருத்தித் தானுமோராசனத்திலே வீற்றிருந்து, அவன் முகத்தைப்பார்த்து, பிராமணோத்தமரே! உமது திருநாமத்தால் பெருமை யுற்றுள்ள எழுத்துக்கள் எவை? உமது பிரிவையாற்றாது வருந்துவது எத்தேசம்? உம்மை நினைந்து கவலையுற்றிருக்கும் ஜனங்கள் யாவர்? (பெயர் ஊர் குலம் வினவியபடி) என்றான். அதற்குக் காளிதாசன் தனது பெயரைக் காளிதாசனென * அரசனுடைய கையிலெழுதினான். அரசன் அதனைப்படித்து அன்பு மீதூரப்பெற்றவனாய்க் காளிதாசனுடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தான். அப்பால்

---

*மூன்று வினாக்களுக்கும் விடைகொடாது ஒன்றற்கு மாத்திரம் விடை கொடுத்தது, காளிதாசன் வரலாற்றை அரசன் நெடுங்காலமாகப் பிறர் வாய்க்கேள்வியால் உணர்ந்திருந்தானாகையால் மற்றைய வினாக்களுக்கு விடை அனாவசியமென்பது கருதியென்க.

இருவரும் மிக்க சிநேகம் பூண்டு நாநாவிஷயங்களிற் சல்லாபம் செய்து கொண்டிருக்கையில் மாலைக்காலஞ் சமீபித்தது. அது கண்டு அரசன், "சூரியன் கடலிலாழ்ந்தான்" என்னுங் கருத்துள்ள, பரிதி பதபயோநிதௌ" என்பதை ஒரு சுலோகத்து முதலடியாகச் சொன்னான். இச்சமையத்தி லங்கிருந்த வித்துவ சிரேஷ்டையாகிய சீதையென்பவள், "வண்டுகள் தாமரைமலரிலடங்கின", என்னுங் கருத்துள்ள, "ஸரஸிருஹா முதரேஷு மத்தப்ருங்க." என்பதை இரண்டாமடியாகச் சொன்னாள். இவைகளைக் கேட்டிருந்த வித்துவ சிரேஷ்டனாகிய பாணகவி யென்பானொருவன் "உத்தியாவனத்தி லிரானின்ற பறவைகள் மரப்பொந்துகளி லடங்கின" என்னுங் கருத்துள்ள, "உபவநதருகோடரேவிகங்க" என மூன்றாமடியைச் சொன்னான். அதுகேட்ட அரசன் காளிதாசனை நோக்கி உத்தம கவியே! நீர் நான்காமடியைச் சொல்லுமென்றான்.. காளிதாசன் அதற்கிசைந்து, "உவதிகளிடத்தில் மன்மதன் மெல்லமெல்ல வரத் தலைப்பட்டான்" என்னுங் கருத்துள்ள, "யுவதிஜநேஷு சனைசனை ரநங்க:" எனநான்காமடியைச்சொன்னான். (உவதி.கசு.வயசுப்பெண்)

"வெய்யவன்சென்றுமேவினன்பாற்கடல்
செந்தாமரைச்சேக்கையவண்டினம்
துய்யகோடரந்துன்னினபுட்குலம்
பையவோதியர்ப்பற்றினன்காமனே"

இதனைக்கேட்ட அரசன் முன்னைய மூன்றடிகளைப் பார்க்கிலும் நான்காமடியே சொல்லிரசம் பொருளிரசம் சந்தரச முதலியனவற் றால் விசிட்டமுற்றிருப்பது கண்டு மிக்க சந்தோஷமுடையனாகிக் காளிதாசனைப் பார்த்து, "நீர் சரசுவதியின் அமிசாவதாரியன்றி மற்றன்று" உமது திருவாக்கால் மாலைக்காலத்தை முற்றாக வரு ணித்தருளுமென்றான். அதற்குக் காளிதாசனும் நன்றென்றிசைந்து, "வியசன மிக்குள்ளவனுடைய கல்வியறிவு எவ்வாறு மழுங்குமோ அவ்வாறு தாமரைப்பூவின் காந்தியும், அந்நியதேயத்தை யடைந்த மானி எவ்வாறு கீழ்மையடைகின்றானோ அவ்வாறு வண்டுகளும், கொடுங்கோன் மன்னன் எவ்வாறு உலகத்தை வருத்துகின்றானோ அவ்வாறு இருளும், உலோபிகளிடத்துள்ள செல்வம் எவ்வாறு சன்மார்க்கத்தில் பிரயோசனப்படாதோ அவ்வாறு கண்களுமிருக் கின்றன என்னுங் கருத்துள்ள:—

"வியசங்ந இவவித்தியா க்ஷீ யதேபங்கஜ ஸ்ரீர்க்குணி இவவிதேசேதைங் யமாயாம்தி ப்ருங்கா: சுந்ருபதிரிவலோகம் பீடயத்யந்தகாரோதனமிவக்ரு பணஸ்ய வியர்த்ததாமேதிரக்ஷ!

துன்பிஞற்றடக்குண்டவர்கல்விபோற்சோதிமாய்ந்ததுதாமரைமாமலர்
வன்புலாய்பிறநாட்டிடைமானிபோல்மாண்புபொன்றினவண்டினமாவன
அன்பிலாமறமன்னவராணைபோல்ஆதியந்தம்பரந்ததுவல்லிருள்
இன்பிலாதபுன்லோபிகள்செல்வம்போலீனமுற்றனகண்களிரண்டுமே.

என்னுமிச்சுலோகத்தைச் சொல்லி முடித்தான். இதனைக் காளிதாசன் சொல்லுந்தோறும் அரசனுக்குண்டாய பெருமகிழ்ச்சி இத்துணையதென்று சொல்லுதலெளிதன்று. இதற்குக் கைம்மாருக உமக்கு யான் செய்யத்தக்கது யாது மென்னிடத்திலில்லையே என்று காளிதாசனைக் கட்டித்தழுவுவான். உம்மோடு சமமாக யான் வீற்றிருக்கத் தகுந்தவனே என்று கூறிக் கீழே அவனுடைய பாதங்களினருகே உட்காருவான். அவர்க்கு உபசாரங்கள் பல செய்வான். நீர் சிறியேனைத் தேடிவர என்ன தவம் செய்தேன் என்பான். யான்பெற்ற பேறுபோல் உலகத்தில் யாவன் பெற்ருன் என்பான். இவ்வாறே அரசன் அவனைப் பலவாறு புகழ்ந்து கொண்டாடி யுபசரித்தான்.

> "கற்ருர்முற் கல்வி யுரைத்தென் மிகவினிதே
> மிக்காரைச் சேர்தன் மிகமாண முன்னினிதே
> எட்டுணை யானு மிரவாது தானீதல்
> எத்துணையு மாற்ற வினிது."

என்றபடி கல்வியறிவினது அருமை பெருமைகளை ஆராய்ந்தும் கேட்டும் சீர் தூக்கியுமறிய வல்ல பிரபுக்களே வித்துவான்களைக் கனம்பண்ணுவார்கள். மாணிக்கத்தினது பெருமையை அறியாதாரிடத்தில் மாணிக்கத்தை விற்கப்போகும் ரத்தின வணிகர் போன்று, இந்நாளில், வித்துவான்கள் தமது கல்வித்திறமையைக் கல்வியென்னுஞ் சொல்லையேனும் செவ்வேயறியாத போலிப் பிரபுக்களிடம் காட்டப்போய் மதிப்பிழந்து மீள்வர். கல்வித்திறமை காட்டி நன்குமதிப்பும் பரிசும்பெற விருப்புவோர் சந்திரனையுங் கங்கையையுந் தரித்த கடவுளைப்பாடுக. இந்நாளிலே போஜன் அவனன்றி மற்றியாவனுளன்! அதுநிற்க: அப்பாற் காளிதாசன், தன்னை அரசன் மிக்க உபசாரஞ்செய்து கனப்படுத்துவதைச்

சகிக்கமுடியாதவனாய், அரசனைப் பார்த்து ஸ்துதியாக ஒருகவி சொல்லத் தொடங்கினான். அதுவருமாறு:—

"ஒருவரை ஒருவர் உபசரிக்க வேண்டுவது சிநேகம் உண்டாகும் வரையுமே. (சிநேகம் உண்டாய பின்னருமன்று) உண்மையான சிநேகிதருக்குச்செய்யும் உபசாரம் பரிகாசம்போலும்" என்னுங்கருத்துள்ள சுலோகம் இது:—

"உபசாரகர்த்தவ்வியோ யாவதநுத்பமநஸௌஹ்ருதா; புருஷ:। உத்பந்நஸௌஹ்ருதாநா முபசார: கைதவம்பவதி॥

வந்திக்க நட்பு வருங்காறும் வந்தபின்
வந்திப்பு நிந்திப்பா மற்று.

இதனைக்கேட்ட போசன் மகிழ்ச்சிகூர்ந்து அச்சுலோகத்திற்காகப் பொன்விளை நிலங்கள் சிலவற்றைக் காளிதாசனுக்குத் தத்தஞ் செய்தான்.

அப்பால் காளிதாசன் தனக்கு அரசனாலே தத்தஞ்செய்யப்பட்ட ஸ்வர்ண நிலங்களின் அருமையையும், அதனால் வரும் அளப்பரும் ஊதியத்தையும், அரசனுடைய இணையில்லாத ஔதாரியகுணத்தையுங் கண்டு, பேரானந்தமும் பெருவியப்புமுடையனாகி அரசனுடைய குணாதிகளை வியந்துகூறத் தொடங்கினான்.

"மனத்துக்கின்பந்தரும் உத்தமபாடல்களைச் செய்யும் புலவருடைய சிரமத்தையும், அப்பாடல்களிலேயுள்ள பலவகை இன்பங்களையும் கற்ற விவேகிகளேயன்றி மற்றோர் அறியார். எங்ஙனமெனில், பிள்ளைப்பேற்றால் வரும் சுகதுக்கங்களை மலடி அறியாதது போலென்க" என்னுங் கருத்துள்ள சுலோகம் வருமாறு:—

ஸுகவே: சப்த ஸௌபாக்யம் ஸத்கவிர் வேத்திநாபர। நஹிவந்த்யா விஜாநாதிபராம் தௌஹ்ருத ஸம்பதம்॥

குழவி பெறுமருமை கூன்மலடி தேராள்
வழுவில் கவிபாடும் வன்மை—செழுமைபெறு
சொல்லிரச மத்தம் சுவையென் பனவெல்லாம்
வல்லவரல் லாரறியார் மற்று.

இச்சுலோகத்தை அரசன் கேட்டு, "இக்கவிமேகம் இல்லையாயின் நாம் செழிப்பதில்லை" என மனத்துள் மதித்து அன்று

முதலாகக் காளிதாசனை முன்னையிலும் சதமடங்கதிகமான அன்பு கொண்டு சிநேகித்து வருவானாயினன். இப்படி வருநாளில், முன்னே காளிதாசனைச் சேர்ந்து சுகித்தல் வேண்டுமென்னும் விரதத்தோடு விலாசவதியென்னும் பெயர் பூண்டு தாசியுருக்கொடுவந்து இப்போ ஜராஜனுடைய தாராநகரத்திலே வசிப்பவளான இராஜகுமாரியின் கண்வலைப்பட்ட காளிதாசன் அவள் வீட்டுக்குப் போக்குவரவுடையனா யிருப்பதை வித்துவான்களறிந்து அவன்மேற் குற்சிதமுற்று அவனைத் தீண்டுதற்கும் அருவருத்திருந்தார்கள்.

இதனை அரசன் கண்டு வித்துவான்களைப் பார்த்து, நீங்கள் பிராமணோத்தமராகிய காளிதாசகவியைத் தீண்டுதற்கு அருவருத்துத் திரிவது யாதுகாரணம்பற்றியென்று வினவினான். வித்துவான்கள் அவனுடைய ஒழுக்கம் தீயதென்று காரணங் காட்டினார்கள். அதுகேட்ட அரசன் ஆச்சரியவசத்தனாகி, கலாசமுத்திரமாகிய காளிதாசகவி வேசிகமனஞ்செய்ப உடன்பட்டதென்னை? காளிதாசகவிக்கு நற்புத்தி போதிக்க யாவருளர்? எனச்சிந்தித்திருந்தான். இங்ஙனஞ் சிந்தித்திருக்கும் அச்சமயத்தில் காளிதாசன் தற்செயலாய் அரசன் சமுகம் வருவானாயினன். வந்தபோது அரசனுடைய முகக்குறியால் அவனுடைய உள்ளக்கருத்தை அறிந்து அவனைப் பார்த்து, "திரிபுரதகனராகிய ஸ்ரீ ருத்திரமூர்த்திமேலும் கூசாது அம்பு தொடுக்கத் தலைப்பட்ட மன்மதன், சிற்றறிவும் சிறுதொழிலுமே இயல்பாகிய குணங்களாகவுடைய எளிய நரர்மேல் பாணந் தொடுக்குந் துணிவையும் விரைவையும் சொல்லவும் வேண்டுமோ" என்னுங் கருத்துள்ள

"சேதோபுவச்ச பலதாப்ரஸங்கேகாவகதாமானுஷலோகபாஜாம்। யத் தாகசீலஸ்யபுராம்விஜேதுஸ்ததா விதம்மானுஷலோகபாஜாம்॥

முப்புரங்கள் செந்தழலில் மூழ்குவித்த முக்கணன்மேல்
செப்புமதன் பாணஞ் செலவிடுத்தான்—அப்பதகன்
சிற்றறிவும் புன்றொழிலுஞ் சேருநரர் மேல்வாளி
எற்றிடுகை நூதனமன் றீங்கு.

என்னுமிச் சுலோகத்தைப் பாடினான். இதனைக்கேட்ட மாத்திரத்தில் அரசன் தன்மனத்திற் குடிகொண்டிருந்த சிந்தாகுலமெல்லாம் தினகரனைக்கண்ட இருள்போல இல்லாதொழிய, மிக்க

மகிழ்ச்சியுடையனாகித் திரவிய சாலாதிபதியைக் கூவியழைத்து, அச் சுலோகத்தை எழுதி அவன்கையிற் கொடுத்து, "இச்சுலோகத்தி லுள்ள அக்ஷரங்கள் எத்தனையோ அத்தனை லக்ஷம் பொன் எடுத்து இக்கவி சிரேஷ்டருக்குக் கொடுப்பாயாக" என்று ஆஞ்ஞாபித்தான். அதனைக்கேட்டுக் காளிதாசன் பேரானந்தமுற்று மீண்டும் ராஜாவை ஸ்துதிக்கத் தொடங்கி "அஷ்டலக்ஷ்மி விலாசனே! இராஜாதி ராஜனாகிய போஜமகாராஜனே! அண்டகோடிகளெல்லாம் உனது எல்லையில்லாத கீர்த்தியினால் ஒரேமயமாய் வெளுத்திருப்பதுபற்றி, திருநாராயணர் தமது திருப்பாற்கடலைக் காணாதவராகித் தேடியலை கின்றார்; சிவபெருமான் தமது கைலாசகிரி எவ்விடத்துளதென வினவித்திரிகின்றார். அவ்வாறே இந்திரன் தனது ஐராவதத்தை யும், பிரமன் அன்னத்தையும், இராகு சந்திரனையும் தேடி யுழலு கின்றனர். திருமால் மோரையெடுத்துக் கொண்டும், சிவன் நெற் றிக்கண்ணைத் திறந்துகொண்டும், பிரமன் நீருடன் பாலைக் கலந்து கொண்டும் ஏனையோர் உபாயங் கண்டறியாமலும் திரிவது இம் மயக்கத்தாலன்றோ" என்னுங் கருத்துள்ள,

'மகாராஜஸ் ஸ்ரீமான் ஜகதியசஸாதே தவளிதே பய: பாராவாரம் பர மபுருஷோய ம்ருகயதே| கபர்தீகைலாஸம் கரிவாமபௌமம் குலிசப்ருத் களாநாதம் ராஹு: கமலபவநோஹம்ஸமதுநா|| நீரக்ஷீரே கருஹீத்வா நிகிலககததீர்யாதி நாளீ கஜன்மாதக் ரம்த்வாது சர்வாநடதி ஜலநிதீந்ஸம்ப்ர மாச் சக்ரபாணி| சர்வாநுத்துங்கசைலாந் தஹதிபசுபதிபால நேத்ரேணபச் யந் வ்யாப்தே த்வத் கீர்த்தி காந்த்யா த்ருஜகதிக்ருபதே போஜராஜக்ஷிதீந் த்ரதே||

என்னுமிச் சுலோகங்களையும், ஓ! பண்டித ராஜரத்னமே! இங் ஙனஞ் சிறந்து நிறைந்துள்ள உனது கீர்த்தியைப் பிரமதேவன் நிதா னங்கண்டறிய விருப்புற்று ஒரு நிறைகோலெடுத்து அதில் உனது கீர்த்தியை ஒரு தட்டிலிட்டு மற்றத்தட்டில் கைலாயகிரியைத் தூக்கி வைத்தான். அக்கிரியினது கீர்த்திக்குச் சமமாகாதது கண்டு அத் துடன் இடபதேவரைத் தூக்கிவைத்தான். அங்ஙனமும் சமமா காமை கண்டு, உமாதேவியாருடன் சிவபிரானையும் தூக்கி வைத் தான், அங்ஙனுமத்தட்டுத் தாழ்ந்திலது. அது கண்டு கங்கையை ஏற்றினன்; அதனாலும் சமப்பட்டதில்லை. அப்பால் மதியையும் ஏற்றிவைத்தான். அதுவும் சமமாக்கிற்றில்லை, ஈற்றில் ஆதிசேடனையுங்

தூக்கிவைத்தான். அவ்வகையிலும் உனது கீர்த்தி சமநிறையாகாததாயிற்று'' என்னும் கருத்துள்ள,

''வித்வத்ராஜசிகாமணே துலயிதும் தாதாத்துவதீயம்யசகா கைலாசம்ச நிரீக்ஷயதத்ரலகுதாம் நிக்ஷிப்தவாந்பூர்த்தயே உக்ஷாணம்ததுபர்யமாஸகசாம் தந்மூர்த்திகங்காஜலம்தஸ்யாக்ரேபணிபுங்கவம் துபரிஸ்பாரமஸூதாதீதிகம்॥''

இச்சுலோகத்தையும், "நாரதர் கோபாலனை ஒருசமயத்தில் கண்டு, "கோபாலா நீ சுவர்க்கத்தைவிட்டு எங்கே போகின்றாய்''யென்ன, அதற்குக் கோபாலன் நாரதரைப்பார்த்து "ஐயா, போஜனுடைய கீர்த்தியைக்கேட்ட காமதேனு ஏங்கி மெலிந்துபோயினமையால் பால் சுரவாதொழிந்தது. ஆதலால் அதன் கன்றுக்குப் புல் அறுக்குமாறு பூமிக்குப்போகின்றேன்'' என்றான். அதுகேட்ட நாரதர் கோபாலனைப்பார்த்து, "கோபாலா, பூலோகத்துச் செய்தி நெடுநாளாக அறியாய்போலும். பூலோகத்திலேயுள்ள புல் எல்லாம் போஜராஜனுடைய சத்துருக்களால் கவ்வப்பட்டனவன்றோ! இதனை நீ அறியாதிருந்தது ஆச்சரியம்'' என்று கூறினாரென்னுங் கருத்துள்ள,

ஸ்வர்க்காத்கோபாலகுத்திரவ் ரஜவிஸூரமுநேபூதரேகாமதேநோ: வத்ஸஸ்யாநே துகாமஸ்த்ரண சயமதுநாமுக்ததுக்தம்நதஸ்யா ச்ருச்வாஸ்ரீபோஜாஜப்ரசுரவிதரணம்வ்ரீடசுவ்ஷ தஸ்தநீஸாவ்யர்த்தஸ்ஹிப்ரயாஸ்ததத்பிததரிபி சர்விதம்சர்வமுர்வ்யாம்॥ என்னும்

இச்சுலோகத்தையும் பாடிப் புகழ்ந்தான். இவைகளைக்கேட்ட போஜராஜன் சொல்லுதற்கரிய மகிழ்ச்சி கூர்ந்து முன்போலவே மீண்டும் அக்ஷரலக்ஷமாகவே பொன்னைவாரி வழங்கினான். இவ்வாறு சில தினங்கள் கழிந்து வருகையில், ஒருநாள் சதுர்வேதங்களையும் ஐயந்திரிபறக் கற்று வல்லவராகிய பிராமணர் சிலர். போஜனது குணதிசுளைக் கேள்வியுற்று அவனுடைய நகரஞ் சேர்ந்தார்கள். அங்கே வந்தமாத்திரத்தில் அரசனைக் காணப்போகும்போது அவனுக்குப் பிரீதியாகிய ஒருபொருளுடன் போய்க் காணுவதன்றோ

அழகென்னும் எண்ணம் தோன்றிற்று. தோன்றவே, அரசனுக்குப் பிரீதியாகிய பொருள் யாதென்று வினவியபோது, கவியேயவனுக்குப் பிரீதியான பொருளென வறிந்து, அவ்வாறே கவியொன்றுசெய்யத்தொடங்கித் தனியிடந்தேடி ஒருங்குகூடிப்பலவாறுயோசித்து, ஈற்றில் ஒருவாறு முதலிரண்டடிக்கும் பொருள்தேடி அப்பொருளுக்கேற்பப் பதங்களை ஆராய்ந்து அமைத்தனர், அப்பால் கடையடிகளை முடிக்க யாதும் புலப்படவில்லை. பலவாறு யோசித்தும் ஒன்றுந் தோன்றாமையால் கவலை மிகப்பெற்று இன்றைக்கு இது முடியாது நாளைப்பார்ப்போம் என்றுகூறி வெளியே போந்தனர்.

அங்ஙனம் போகையில், காளிதாசன் நாள்தோறும் புவனேசுவரி ஆலயத்துக்குப் போய்வரும் வழக்கப்படி அங்குப்போய்த் தரிசனமுற்றி மீண்டுவந்தான். அச்சமயத்திலே காளிதாசகவி இவன்தான் என ஒருவன் அவ்வேதியர்க்குக் காளிதாசனைச் சுட்டிக் காட்டினான். காட்டலும் வேதியர் விரைந்து காளிதாசனை அணுகி மங்கள ஆசி கூறினார்கள். அதற்குப் பிரதியாகக் காளிதாசனும் வந்தித்தான். அதன்பின்னர் அவ்வேதியர்கள் அவனைப்பார்த்து, „உத்தமகவியே, யாம் உத்தரதேசத்தேம். வேதங்களிலே யாம் அறியாதது யாதுமில்லை. அச்செல்வம் எமக்கிருந்தும் யாம் முன்னைநாட்செய்த தவக்குறைவால் இச்சென்மத்தில் போஜனத்துக்கு அலைபவர் ஆயினேம். எமக்கோ கவிசெய்யும் வல்லபமில்லை அன்றியும் உம்போலும் உத்தமகவிகளுக்கே அரசன் மழைபோலத் திரவியங்களை வழங்குகின்றானும். எம்போலும் வேதவிற்பன்னரைக் காணின் யாதுசெய்வானோ அறியேம். ஆயினும் அவனைக் காணப் புகும்போது அவனுக்குப் பிரீதியாகிய ஒருபொருளைக் கொடுத்துக் காண்பதே மரபாதலின், அவனுக்குவப்பாகிய கவியொன்று செய்து கொண்டுபோகக் கருத்துற்றேம். கருத்துற்றும் எங்கருத்துப்படி கவி முடியவில்லை. பாதிக்கவி மாத்திரம் ஒருவாறு அமைந்தது. அப்பால் அடுத்தபாதியையும் முடித்து முழுக்கவியாக்க எமக்கு யாதும் தோன்றவில்லை. ஆதலால் அதன் குறையை நீரே முடித்துத் தருவீராக. அதற்கு உமது சம்மதம் எப்படி" யென்றார்கள். அதுகேட்ட காளிதாசன் அவர்கள்மேற் கிருபைகூர்ந்து, "அந்தணீர் நீங்கள் அமைத்த கவிலடிச் சொல்லுங்கள் பார்ப்போம்'என்றான்

அவர்களும்உடனே அக்குறைக்கவியைச் சொன்னார்கள். அதுவரு மாறு:—"போஜராஜனாகிய இந்திரனே, எமக்குப் போஜனம் கொடும். அதுவும் நெய்பருப்புடனிருத்தல் வேண்டும்" என்னுங்கருத்துள்ள "போஜனம் தேகி ராஜேந்ராக்ருதஸூபஸமந்விதம்" என்பது. அதுகேட்ட காளிதாசன் குஞ்சிரிப்புற்று, "நன்றாயிருக்கிறது. உங்கள் வேண்டுகோளின்படி மற்றைய அடிகளையும் முடித்துத்தருகிறேன் எழுதிக்கொள்ளுங்கள்" என ஆஞ்ஞாபித்து,

"சரற்காலத்துச் சந்திரகாந்திபோலும் வெள்ளிய எருமைத் தயிருஞ் சேர்த்துக் கொடுப்பீராக" என்னுங்கருத்துள்ள,

மாஹிஷஞ்சசரத்சந்த்ரசந்திரிகாதவளம்ததி।

என்னும் கடையடிகளைச் சொன்னான். பின்னர் வேதியர்கள் அக்கவியை மனனம்பண்ணிக்கொண்டு அரசனுடைய சமுகஞ் சேர்ந்தார்கள். அரசனுமவர்களை யுபசரித்து நீங்கள் வந்தகருமம் யாதென்று வினவ, வேதியர் அரசனைப்பார்த்து, மண்டலேஸ்வரா, ஒருகவி செய்துகொண்டு வந்தோம், அதனைச் சிரவணஞ் செய்தருளுவீராக என்று வேண்டினார்கள். கவிப்பிரியனாகிய அரசன் களிகூர்ந்து வேதியரைப்பார்த்து, சொல்வீர்களாக என்றான். அவர்கள் இன்று எமது மிடிநீங்கிற்று என்று உள்ளத்தில் எண்ணிக்கொண்டு அக்கவியை எடுத்துப்பாடினார்கள். அரசன் அதனைக்கேட்டுப் புன்னகைகொண்டு, நீர் செய்துவந்த கவியில்முன்னைய அடிக்கு யாதுங் கொடுக்கத்தக்கதன்று. பின்னைய அடிக்கே பொருள் கொடுக்கத் தக்கது. அவ்வாறே அவ்வடிக்காக அக்ஷரத்துக்கு இலக்ஷம் பொன் மேரையாகப் பெற்றுக்கொண்டு செல்லுமின் என்று கூறினான். வேதியர்கள் "குருடனுக்கு வேண்டியதுகண்" என்றாற்போல எவ்வடிக்காயினு மாகுக, எமக்குவேண்டுவது திரவியமே என மனத்துள் மதித்துப் பொன்னை வாங்கிப் பொதியாக்கிக்கொண்டு தம்மில்லத்துக் கேகினார்கள். அப்பால் காளிதாசன் அரசன் சமுகம் புகுதலும் அவனைப்பார்த்து "இக்கவியின் கடையடியை யியற்றிக் கொடுத்தவர் நீரன்றோ" என்று எடுத்துக்கூறி வினவ, காளிதாசன் அரசனைப் பார்த்து, "அதரவினிமையையும், ஸ்தன காடின்னியத்

தையும், நேத்திரத்தினது கூர்மையையும், கவிரசத்தையும் அனுப வித்தவரே அறிவர்'' என்னும் கருத்துள்ள,

''அதரஸ்யமதுரிமாணம்குசகாடின்யதஸோஸ்துதைக்ஷண்யம்ச| கவிதாய பரிபாகம்ஹ்யநுபவரஸிகோவிஜாநாதி''

என்னுமிச்சுலோகத்தை யெடுத்துக் கூறினன் அதுகேட்ட அரசன் உண்மை உண்மையென்று மெச்சி அவனையும் அவனுரையையு முச்சிமேற்கொண்டான். இப்படி அரசன் தினந்தோறும் காளிதாசன்மேலதிகரித்த அன்புகொண்டு அவனைச் சன்மானித்து வருநாளில் ஒருநாள் அரசன் சமுகத்தில் காளிதாசன்புக, அரசன் வழக்கத்துக்குமாறாக எழுந்து மரியாதைசெய்யாமலும் இனிய சொற் சொல்லாமலு மிருந்தான். அதுகண்ட காளிதாசன் முகமும் மனமும் கறுத்து, இதுகாறுமில்லாத இவ்வவமதிப்புக்குக் காரணமென்னை? என்று சிந்தித்து நின்றான்.

அப்போது, "வித்துவான்கள் செய்துவருகின்ற மித்துருபேதமே இங்ஙனம் அரசன் செய்தமைக்குக் காரணமாமன்றி, வேறுயாம் யாதேனும் அரசனுடைய அதிர்ப்திக்கேதுவாகச் செய்ததொன்றில்லையே. அதனை அரசன்தானே யுணர்ந்து கவலட்டும்'' எனமனத்துட் சமாதானஞ் செய்துகொண்டு, சபையைவிட்டு நீங்குமளவில், அங்கேயொரு தராசு இருப்பக்கண்டு, அதனைப்பார்த்துச் சொல்லுவான்போன்று சிலேடையாக ஒரு சுலோகஞ்சொன்னன். அது வருமாறு:—"ஓ! தராசே! உனது செயல் மிகவும் வியக்கற்பாலது! பெரிய வஸ்துவைக் கீழாகவும், சிறிய வஸ்துவை மேலாகவுஞ் செய்கின்றனையே! இஃதென்னை'' என ஒருவாறும், "ஏ! நியாயாதிபதீ, பெரியோரைக் கீழாகவும், சிறியோரை மேலாகவும் மதிக்கின்றனையே. உனது நியாயாதிபதித்துவ மிருந்தபடியென்னை!'' என மற்றொருவாறும் பொருள் கொள்ளத்தக்க,

"ப்ராப்ய ப்ரமாண பதவீம் கோநாமாஸ்ஸளதுலே பலேபஸ்தே நயவிகரிஷ்டமதஸ்தாத் ததிதாமுச்சைஸ் தாரம்குருஷே||''

சடநிலைநின் ருர்க்குந் தகநிறையைக் காட்டுஞ்
சமரசனே யரனுற் றராசே—அமையவரும்
அற்பமதை மேலாக்கி ஆருங்க னமதனை
எப்படிக்கீ பூாக்கினைநீ யீண்டு.

இச்சுலோகத்தால் அரசனைக் கண்டித்தவழியும் காளிதாசன் தனது மனத்துயருக்கு எல்லை காணுதவனுகி மீண்டும் அரசனைப் பார்த்து, "யாரும் தமதுதேசம் என்னும் ஆசைபற்றிப் பிறதேசம் போகுங்கால் வியசனப்படுதல் ஆச்சரியம். தமது முன்னோரால் தோண்டப்பட்ட உப்புநீர்க் கிணற்றில் தமது கிணருயிற்றே யென்னுமுரிமையால் தாகம் தணிப்பரோ" என்னுங் கருத்தமைந்த,

"யஸ்யாஸ் திசர்வத்ரகதி ஸ்ஸகஸ்மாத்ஸ்வதேச ராகேணஹியாதிகேதம்l
தாதஸ்யகூபோய்மிதிப்ருவாணா: க்ஷாரம்ஜலம் கேபுருஷா: பிபந்தி ll"

ஆருவர்நீர்க் கூபமே யாயிடினு மெந்தையிது
பாரறியத் தொட்டதொரு பண்பினுல்—நீரதனை
யுண்பே னெனவொருவ னுண்ணுமோ பாணகரை
என்பேரூர் என்ப தெவன்.

என்னுமிச் சுலோகத்தைச் சொல்லிவிட்டுத் துக்கத்தோடும் அரசனுடைய சபையை விட்டகன்று தாசிவீடுநோக்கிச் செல்லுகையில், "உடைந்து பிளவுபட்ட முத்தானது செம்பஞ்சுக்குழம்பினுல் பொருத்தப்படுமாறுபோல அஞ்ஞானத்தினுல் பிரிக்கப்பட்ட நம்மிருவரையும் சந்திசெய்ய வல்லுநன் எம்மகான்?" என்னுங் கருத்தையடக்கி,

,அவஞ்ஞாஸ்படிதம் ஸமீகர்த்தும்கஈஸ்வர:l ஸம்திமயாதிஸ்புடிதம் லாக்ஷாலேபேலமௌக்திகம் ll

என்னுமிச்சுலோகத்தை யியற்றிப் பாடிக்கொண்டு சென்றான். அப்பாலரசனும் ஊடல்கொண்ட மங்கையினது மனத்தைப் போலும் மனமுடையனுகி அவைக்களம் விட்டகன்று அந்தப்புரஞ் சென்று கூம்பிய முகத்துடன் மஞ்சத்திற் படுத்திருந்தான். அப்போது அவனுடைய தேவி லீலாவதி வந்து, அவன் முகத்தை நோக்குமளவில், அது வழக்கத்துக்குமாருகப் புலர்ந்திருப்பக்

கண்டு, பிராணநாதரே! அடியாள் முகமும் தமது திருவதனமும் உதயாதித்தனும் அதன் பிரதிவிம்பமும்போன் றிருத்தற்குமாறாகச் சூரியன் முன்னர் நின்ற சந்திரனையொத்து இன்று தமது முகம் புலர்ந்திருத்தற்குக் காரணம் யாது? என்றாள். அது கேட்டரசன், "பிரியை, காளிதாசகவி இன்று எமது அவைக்களம் புக்கபோது, அவரை என்றும்போ லுபசரிக்காது அவமதித்திருந்தேம். அதனால் அவர் கோபித்து உடனே சபையைவிட்டு மீண்டனர்" என ஆதியோடந்தமாக அங்கு நிகழ்ந்தயாவுங் கூறினான். அப்பால், அரசி, அரசனைப்பார்த்து, "நாயகரே, அறிவிற்சிறந்த தாம் இப்படி அவரை அவமதித்தல் தகுமா? கூடிப்பிரியேல் என்பது மூதுரை; பூண்ட சிநேகம் பங்கப்பட விடுவதினும் சிநேகம் பூணாதிருத்தல் நன்று. எங்ஙனமெனில், ஒருவனுக்குப் பிறவிதொட்டுண்டாய கண்கள் பின்னர் இடையிலே கெடுமாயின் அவனுக்குண்டாகும் துக்கம் மிகப்பெரிதாம்: பிறவிக்குருடனுக்கோ துக்கம் மிகச்சிறிதாம். அதுபோல ஒருமுறை நட்டநண்பு பின்னர்ப் பங்கப்படுமாயின் அதனால் வருந் துன்பம் ஆற்றற்கரிதாமென்க. அங்ஙனமாகவும் காளிதாசனோ சரஸ்வதியினது அமிசாவதாரியா யுள்ளவன். ஆதலின் அவன் விசேஷ பூச்சியதைக்குரியன். ஆதலின், தாம் அவனை அவமதித்ததும் வெறுத்ததும் தகா" என்றாள். இவற்றைக் கேட்ட அரசன், மிக்கமகிழ்ச்சியுடையவனாகி, என் அமிர்தமே, என்போலும் பாக்கியசாலி யாவனுளன்? யான்பெற்ற பேறு யாவர்பெற்றார்? உன்னைப்போலும் மந்திரி எனக்கு வேறுயாவன்! நன்று சொற்றனை. உன்னை மணமுடித்த பயன் இன்றுதான் பெற்றேன். நீ கூறியவை யாவும் உண்மையே. உனது இஷ்டப்படி நாளை உதயத்தில் காளிதாசகவியை வரவழைத்துச் சமாதானம் பண்ணுகின்றேன் என்றுகூறி அவளையும் அவளுடைய விவேகத்திற்காக மெச்சி, எப்போதும் சூரியோதயமாகுமென்னும் ஆவலுடன் உண்டு சுகித்து நித்திரை போயினான்.

அடுத்தநாட் காலையில் அரசன் நித்தியகடன்களை முடித்து வழக்கம்போலச் சபாமண்டபம் புகுந்தான். அப்போது அங்குள்ள வித்துவக்குழாம் சந்திரனில்லாத தாரகைக் குழாம்போலக் காளி

தாசனில்லாமையால் பொலிவுகுன்றியிருப்ப, அரசன் அதனுல் மனம்வாடி, பக்கத்திலிருந்த சேவகரை விளித்துக் காளிதாசகவியைக் கடிதுசென்று அழைத்து வம்மின் என்று ஆஞ்ஞாபித்தான். அவ்வாறே அச்சேவகரும் காளிதாசகவியிடஞ் சென்று அஞ்சலி செய்து, அரசன்தம்மை அழைத்துவருமாறு எம்மைப் பணித்தான். எழுந்தருளுக என்ருர். அதுகேட்ட காளிதாசன் அலங்கிருதனுகி அரமனேயை நோக்கிச் செல்லுகையில், நேற்று அரசனுல் அவமதிக்கப்பட்டநாம் இன்று அங்குப்போதல் தகுமா? யாது பற்றி அரசன் எம்மை அழைத்தான்? அரசன் தான் இதுகாறும் அன்பினுலுபசரித்துச் சன்மானித்துவந்த வித்துவான்களையெல்லாம் துரத்துதற்குக் கருத்துக்கொண்டானே? என்னுங் கருத்துள்ள,

யம்யம்ருபோ நாகேண ஸம்மாநயதிஷ்ய்ஸதி| தயஸ்தஸ்யோத்ஸாரணாய யதம்தே ராஜவல்லபா||

என்னுமிச்சுலோகத்தைச் சொல்லி, இன்னும், நாடோறும் நாம் அரசனுற் சன்மானிக்கப்பட்டு வந்தும், மாபாவியாகிய மனஸ்தாபத்தினுல் துவேஷிக்கப்பட்டேம். குணவான்களாகிய மந்திரிகளிடத்தில் யோசனேயில்லாது அரசியற்றும் அரசன் எங்கேயிருக்கின்ருனே அங்கெல்லாம் துஷ்டரிருப்பரன்றிச் சத்துருக்களுமிருப்பார்களோ இரார், என்னுங்கருத்துள்ள,

"அவிவேகமதிந்ருபதிர் மந்திரிஷுகுணவத்ஸுவக்ரிதக்ரீவ:| யத்ராகலாஸ்ச ப்ரபலாஸ் தத்ராகதம் ஸஜ்ஜநாவர||"

என்னுஞ் சுலோகத்தையுஞ் சொல்லிச் சென்று அரமனேவாயிலேயடைந்தான். அப்போது அரசன், காளிதாசன் செல்லும் அரவங்கேட்டு ஆசனத்தைவிட்டெழுந்து, ஐந்து ஆறடிதூரம் எதிர்சென்று உபசரித்துத் தனது கரத்தால் அவன்கரத்தைப் பற்றி அழைத்துப்போய்ப் பக்கத்திலிருத்தித் தானுமிருந்தான். அப்போது அங்கிருந்த கவிவாணருடைய முகமெல்லாங் கரிந்தன. அதற்கே

திவாக அரசனும், காளிதாசனைநோக்கி, உத்தம கவி சிரேஷ்டரே, நீர் இன்றைக்கித்தனைநேரம் தாழ்த்து வந்ததென்னை? அன்பரே, நீரில்லாத சபையு மொருசபையாகுமா? என்று பலவாறு புகழ, இருவரும் பிரிந்துகூடிய தலைவியும் தலைவனும்போன்று, அன்புப் பெருக்கமுடையராகி, வழக்கம்போல அற்றைப்பகலைக் கழித்து மீண்டனர். அன்றுதொட்டுச் சிறிதுகாலம் நட்போடு கழித்து வருகையில், காளிதாசனுடைய சத்துருக்களாகிய கவிவாணர் தம்முள் விளைந்த பொறாமை காரணமாக ஒருநாள் யாவரும் ஒருங்கு கூடிச் சூழ்ச்சிசெய்து, அரசனுடைய பாங்கியருள் ஒருத்தியை அழைத்து, நங்காய், நெடுங்காலமாக அரசனுடைய சமஸ்தானத்து வித்துவான்களாகவும் அவருக்கு உற்ற நண்பர்களாகவுமிருந்த எங்களுக்குக் காளிதாசன் சனீஸ்வரன்போற் குறுக்கிட்டான். அவனால் எங்கள் கீர்த்திக்கும் வருவாய்க்கும் பங்கம்வந்தது. இது உனக்குத் தெரிந்தவிஷயமே. அவனைக்கல்வியளவில் வெல்லத்தக்க அத்துணை வல்லவர்கள் உலகத்திலில்லை. ஆதலால் நீ ஒரு சூழ்ச்சிசெய்து அவனைப் பரதேசம் போகுமாறு செய்வையேல் உனக்குப் பரிசுகொடுப்போம் என்றார்கள்.

அவள் அதுகேட்டு மகிழ்ந்து, புத்தியுண்டாயின் சாதித்தற்கரியது யாது? எனக்குப் பொன்னாலாய ஆரமொன்று தருவீர்களாயின் உங்களிஷ்டப்படி முடிக்கிறேன் என்றாள். அவ்வாறே அவர்களும் ஓராரத்தை அவளுக்குக் கொடுத்து அவளைத் தூண்டிவிட்டுச் சென்றார்கள். அவள் அதனைப்பெற்றுக் கொண்டு சமயம் பார்த்திருக்குநாளில் ஒருநாள், அரசன் அவளைத் தன்கால்களை வருடுமாறு பணித்து நித்திரை செய்தான். அப்போது அவள் தன் கருத்தை நிறைவேற்றுதற்கு இதுவே தகுந்த சமையமென வூகித்து, அரசனுடைய கால்களை நித்திரைச்சோர்வினால் இடைஇடையே விடுத்துப் பிடிப்பாள்போன்று நடித்துப் பிடித்து, நித்திரைமீதூர்ந்து கனவிற் புலம்புவாள்போல, "காளிதாசன் காமவிகாரங்கொண்டு பாங்கியுருத்தரித்து அந்தப்புரத்திலே லீலாதேவியுடன் இரமிக்கின்றான்" என்று நடித்துக்கூறினாள். அதுகேட்ட அரசன் திடுக்குற்று, நித்திரையை விட்டெழுந்து, தரங்கவதி! என்று அவள் பெயரைச்சொல்லி விளித்து, நீயுந் துயிலு

கின்றனையோ? என்ருன். அதற்கு அவள் அப்போதுதான் துயில் விட்டு விளிப்பவள்போல் விழித்து நடிப்பாக யாதுமறியாதவள் போலத் திகைத்துகின்ருள். அப்பால் அரசன் அப்பஞ்சணையிற்ரு னே யிருந்து, "இவள் கண்டதோ கனவு. கனவிலே முன்னர்க்கா ணுததொன்றும் தோன்ருதன்ருே. இவள் கண்ட கனவு தேவா நுஞ்ஞையால்வந்த கனவுமன்று. எனது தேவி லீலாவதி கற்பிற் சிறந்தவளாகவும் அங்ஙனஞ் செய்யாளே! காளிதாசனே காமவிகார முடையவனென்பதில் சந்தேகமுமில்லை. காமிகளுக்கு நியதியில் லையென்பதும் ஆன்ருேர் வாக்காயிற்றே. அவன் தாசியுருத்தரித் தற்கு மொருப்படுவான். எப்படியிருப்பினும் இதனைப் பரீக்ஷித்து நிச்சயித்தல்வேண்டு" மென மனத்துள் முடிவுசெய்தகொண்டு அடு த்தநாட்காலையில் அரசன் தனக்குச் சுரநோயுண்டாயிற்று என நடித்துப் படுத்திருந்தான். அதனை அறிந்து காளிதாசனும் அரச னைப்பார்க்க வந்திருந்தான். அப்போது அரசனுடைய தேவி லீலா வதியும் பயிற்றம்பருப்பும் அரிசியும் கலந்து பாகஞ்செய்த பத்திய வுணவைப் பாங்கி தரங்கவதியால் எடுப்பித்துக்கொண்டு அங்கு வந்தாள். அரசன் அதனிடத்துள்ள பயற்றம் பருப்பைப் பார்த்துச் சொல்லுவான்போன்று சிலேஷார்த்தம் பயக்குமாறு, "இப்பருப்பு வெட்கமற்று ஆடையின்றி இங்கு வந்திருக்கின்றதே" என்னுங் கருத்தமைந்த,

"முத்க தாளீகதவரீளாகவிம்த விஜவஷாம்கதம்!"

என்னுமிவ்வடியை யியற்றிச்சொல்ல, காளிதாசன் அதனைக் கேட்டு, "பிறவிக் குருடன்முன்னர் ஒருபெண் ஆடையின்றி வந் தாற் றேஷமாமோ?" என்னுங் கருத்தமைந்த,

"தேவ்யாம சமீபவர்த்திங்யே!"

என்னுமிக் கடையடியை உத்தரபாகமாகச் சொல்லி அச்சு லோகத்தைப் பூரணஞ்செய்தான். இதைக் கேட்டமாத்திரத்தில் எல்லாமறிந்த லீலாவதி மந்தஹாசஞ்செய்தாள். (மந்தஹாசம்— புன்னகை) அதனைக் குறிக்கொண்ட அரசன், நாம் நினைத்ததற்கும் இவள் புன்னகை செய்ததற்கும் பொருத்தமாயிற்று. ஆயினும் பெண்களுடைய மனநிலையை யாவர் உணரவல்லவர் என்று மனத்

துள் மதித்துக்கொண்டு, கோபாதிக்கனுக்கிக் குற்றமற்ற காளிதாசனைநோக்கி, ஏ! காளிதாசா! நீ எனக்கு மிக்க நண்பனுயிருப்பினும் அதனை நான் பொருட்படுத்துகின்றிலேன். நீ பிராமணனுயினே. அதனால் உன்னைச் சிரச்சேதப்பண்ணுது விடுகின்றேன். இனி நீ எனது தேசத்தில் ஒரு சிறிதுநேரமு மிருத்தலாகாது. என் தேசத்தை இக்கணத்திற்றானே விட்டு அகலக்கடவை. மறுமாற்றமின்றித் தூரநடவென்று கடிந்துசொன்னான். இவ்வாறே பாவிகளாகிய அக்கவிவாணருடைய ஏவலின்வழிச் செய்த மகாதுஷ்டையாகிய பாங்கியினது வஞ்சவுரையினால் அரசன் வெகுண்டு, நிரபராதிகளாகிய காளிதாசன்மேலும் லீலாவதிமேலும் அபவாதமேற்றி, லீலாவதியை யாதுஞ்செய்யாது, காளிதாசனைத் தனது சமுகம் விட்டு ஓட்டினான். காளிதாசனும் இது தெய்வசம்மதமென நினைத்து விலாசவதிவீடு போய்ச்சேர்ந்தான்.

இவ்வாறு வீடுபோய்ச்சேர்ந்த காளிதாசனை விலாசவதி எதிர்சென்றுபசரித்து அழைத்துப்போய்ப் பஞ்சணைமீதிருக்குமாறு செய்து, தானும் அருகில் உட்கார்ந்து அவனைநோக்கி, எனது பிராணநாதரே, எந்நாளும் இவ்வளவு சீக்கரமாக அரமனையைவிட்டு வீட்டுக்குவாராத நீர், இன்றுவந்த காரணம் யாது? உமது முகம் புலர்ந்திருப்பது யாதுபற்றி? எனக்கேட்டனள். அதுகேட்டுக்காளிதாசன், அவள் முகத்தைப்பார்த்து, பிரியாய், உன்னைப்பிரிதற்குக் காலம்வந்ததே. உன்னை எவ்வாறு பிரிந்தாற்றுவேன் என்பதே என் மனத்தை அராவுவது என்றான். அதுகேட்ட விலாசவதி, இடியேறுகேட்ட நாகம்போல நடுநடுங்கி, ஐயோ? என்பிராணநாதரே, இவ்வுரைகளைஎன்னிடத்தில் மனங்கூசாது எவ்வாறு கூறத்துணிந்தீர்? நீர் பிரிந்தால் என் உயிர் தரிக்குமோ? அன்பரே, இன்று அரசன்சமுகத்தில் நடந்ததுயாது? அடியாளுக்கு ஆதியோடந்தமாகக் கூறுமென்ன, காளிதாசன் அவளைநோக்கி, நங்காய், எனதுசத்துருக்களாகிய வித்துவான்கள்செய்த வஞ்சச்சூதினால் அரசன் மயங்கி, என்னைத் தனது தேசத்தினின்றும் ஓடிப்போகுமாறும், போகாது தரிக்கின் சிரபங்கதண்டம் அடையுமாறும் கடிந்து ஆஞ்ஞாபித்துவிட்டான். ஒன்றை நாம் நினைத்திருக்க மற்றொன்று வந்து கூடுவதும், அங்ஙனமின்றி அதுவே வருவதும், நினையாமலிருக்க நன்மைகள் வந்து சேருவதும் ஈசன் விதிப்

படியன்றி எமது எண்ணப்படியன்று. ஆதலால் யான் அரசனுடைய ஆஞ்ஞைப்படி அந்நிய தேசம் போகப் பிரியாவிடை கொடுப்பாயாக என்னுங்கருத்துள்ள,

"அசடித கடிதர நிகடயதிகடித கடிதாநி தூர்க்கடீகுருதே1 விதிரேவதாநி கடயதியாநி புமாந்நேவசிந்தயதி11

என்னுமிச்சுலோகத்தையும், "நொய்தாகிய புல்லானது கற்றையாகத் திரண்டு முறுக்கப்பட்டபோது மதங்கொண்ட யானைகளையும் கட்டற்கு வாய்ப்பதுபோல, புன்கவிகளாகிய சத்துருக்களுடைய திரண்ட பொறாமையால் யான் இவ்வாறு துன்பத்திற்கு ஆளாயினேன்" என்னுங் கருத்துள்ள,

பஹூநாமல்பசாராணும் சமவாயோ துரத்யய:1 த்ருணைர்விதீயதே ரஜ்ஜுர்ப்பத்தியந்தேமதந்திந:11

என்னுமிச்சுலோகத்தையும் சொன்னான். அதுகேட்ட விலாசவதி, குறுமுறுவல்கொண்டு, "இதற்குத்தானா அஞ்சினீர். அஞ்சாதீர் நீர் எனது வீட்டிலேதானே சகலவித சுகங்களோடும் மறைந்து வாசஞ்செய்யலாகும். ஆதலால் நீர் பரதேசஞ் செல்லவேண்டுவதில்லை" என்றாள். நன்றென்று கூறிக் காளிதாசனு மதற்கிசைந்து அங்கேதானே இருப்பானாயினான்.

இப்படியிருக்கையில் ஒருநாள் அரசனுடைய தேவி லீலாவதி நிலாமணிமுற்றத்திலே நின்று குறுநகைகொண்டாள். அப்போது மாலைக்காலமாதலில், காளிதாசன் மாறுவேஷம்பூண்டு புவனேஸ்வரி ஆலயத்திற்குப் பூசைகாணுமாறு வீதிவழியே சென்றான். அவனுடைய நடையினால் அவனைக் காளிதாசனென வுணர்த லீலாவதி அரசனிடம்போய், என் பிராணநாயகரே, தாம் என்னுடன் வந்து சல்லாபித்திருத்தற்கும் நேரங்காணாதவராகிச் சிறிதுகாலம் காளிதாசனுடன் கட்ட நண்பு இப்போது யாதாயிற்று? என்றுகேட்டாள். அரசன் அவளைநோக்கி, பிரியாய், காளிதாசன் தினந்தோறும் பாங்கியுருத்தரித்து அந்தப்புரத்துக்குவந்து உன்னுடன் ரமித்துப்போகின்றான் எனக்கேள்வியுற்ற நான், அதனை நிச்சயிக்கும்பொருட்டுச் சிலகாலத்துக்குமுன்னர் ஒருநாள் சுரங்கொண்டேன்போன்று நடித்துப் படுத்திருக்கையில், காளிதாசனும் நீயும்

நேர்முகமாய் என்முன்வர நேர்ந்ததை நீயுமறிவையன்றோ. அப்போது நான்சொன்ன முற்பாதிச் சுலோகத்துக்குப் பிற்பாதியாகக் காளிதாசன் கூறியதைக்கேட்டு நீ மந்தஹாசஞ்செய்தமையால் நான் சந்தேகித்து, அவனை ஊரைவிட்டு ஓடுமாறு கட்டளையிட்டேன். உன்னைத் தாக்ஷிண்ணியத்தால் கொலைசெய்யாது விடுத்தேன். இதுவே காளிதாசனை நான் பிரிந்ததற்குக் காரணமென்றான். அது கேட்டதேவி, நாயகரே, நன்றுசொற்றீர்! உம்மாலே தழுவப்படும் என்தேகம் பிறர்தேகத்தைத் தீண்டுதற்கும் ஒருப்படுமா! மாதர்களெல்லோரும் உம்மைச் சேருதற்குத் தவஞ்செய்ய, முன்னை ஊழ்வலியால் எனக்குக்கிடைத்த கிட்டுதற்கரிய உமது சேர்க்கையை நான் தள்ளிவிட்டுப் பிறனொருவனைத் தேடப்புகின் என்புத்தி என்னபுத்தியாமோ! இனி யான் இருந்தென்ன இறந்தென்ன! ஆ! ஜகதீசா! என் பதிவிரதாதன்மத்தை இக்கணத்தில் நாட்டேனாகில் உயிர்விடுவதில் ஐயமில்லை என்றாள். நன்றென அரசனும் மற்றைநாளுதயத்திலே பழுக்கக்காச்சிய இருப்புப்பலகைகளை ஏவலாளரால் பரப்புவித்து, தேவியைநோக்கி, இதன்மேல் நடந்துவரக்கடவை; அன்றேல் கொல்லுவன் எனச் சராசனத்தை எடுத்து நாண்பூட்டி அம்புதொடுத்து ஆயத்தனானான். அவ்வாறே அவளும் ஸ்நானஞ்செய்து சூரியதரிசனம்பண்ணி நமஸ்கரித்து எழுந்துவந்து, புஷ்பசயனத்தின்மீது நடந்து உலாவுவாள்போன்று மும்முறை அவ்விருப்புப் பாளத்தின்மீது நடந்து மயிலென ஒதுங்கினாள். கற்புநெறி தவறாத உத்தமிகளுக்கு அக்கினியுமஞ்சுமென்றால், பொறுமையால் வசிட்டமுனிவரது தேவியாங் கோதைபோலுங் கற்பினாற் சிறந்த உத்தம பத்தினிகளை வாளாதூற்றும் பாவிகளுக்கு நாப்புழுத் தழுகுதல் முதலிய கொடிய ரோகங்கள் இம்மையிலும், மறுமையில் இரௌரவாதி நரகங்களுமே கதியாமென்பதைத் துணிதல்வேண்டும். அதுநிற்க: இங்ஙனமவள் நடந்துசென்ற மாத்திரத்தில் அரசன் அச்சமும் வெட்கமு மேலிடப்பெற்றவனாகி நடுநடுங்கிக் கண்களினின்றும் கண்ணீர்வார, நாத்தழுதழுத்து அவளை அணுகி, தேவி! "யான் ஆயாமற்செய்த பிழையைப் பொறுக்கக்கடவை" என்று இரந்து, அப்பால், பாவியேன் யாதுசெய்தேன், கவே! காளிதாச! கவிகோடிமகுடமணே! என்னுஞ் சொற்களையன்றி வேறு யாதுங்கூற அறியாதவனாகிச் சோகித்துப் பேய்கோட்பட்

டான்போன்று க்ஷணந்தோறும் கவே! கவே! எனப்பிதற்றிக் கொழுவிழுந்து புரளத்தலைப்பட்டான். அதுகண்ட தேவி தனது கையினாலே சிறிது ஜலத்தையெடுத்து அரசனுடைய முகத்திலே தெளித்து அவனுக்குப் பிரஞ்ஞை உண்டாக்க, அரசன் விழித்தெழுந்து காளிதாசனுக்குத் தான் செய்தது அநீதியே என்று அவளுக்குச்சொல்லி மிகப்பரிதபித்து, அவனை எப்போது காண்பேன்! என்குற்றத்தை எவ்வாறு நீக்குவேன்! என்னைப்போலும் மூர்க்கன் உலகிலுளனோ! எனப் பலவாறுகூறித் தன்னைத்தானே நிந்தித்திருந்தான். அரசனுக்குக் காளிதாசனைப் பிரிந்த துக்கம் இம்மட்டில் நீங்கிற்றன்று. அரசன் அவனை ஒவ்வொரு சமயத்தில் நினைந்து அன்றுமுழுதும் அதுவே கவற்சியாய் ஊண் உறக்கம் ஒழித்து வாளாவிருப்பான்; தனது சமூகத்து வித்துவான்களை நிந்திப்பான்; ஏவலாளரைக் .கடிவான். இப்படிச்சிலகாலங் கழிந்துவருகையில், ஒருநாள் அஸ்தமயனகாலத்திலே அரசனும் தேவியும் நிலாமணி முற்றத்திலே சல்லாபவினோதரா யிருந்தனர். அப்போது இருட்படாம்நீக்கி உதயமாகும் சந்திரனையும் தன்முன்னரிருக்கும் லீலாவதியினுடைய முகத்தையும் அரசன் பார்த்து, "கற்பிற்சிறந்த லீலாவதியினுடைய முகத்துக்குச் சிவபெருமான் சடையிடமாகத் தரித்த சந்திரனே உவமிக்கப்படத்தக்கது" என்னுங் கருத்துள்ள,

"துளண அணு அணு ஸா இக்ளௌளஸோமுஹசதம்ஸகுளதாயே1

என்னும் இப்பாதிச் சுலோகத்தைச் சொன்னான். இதனைக் கேட்டுச் சமீபத்திலிருந்த வித்துவான்களெல்லாரும் அதனை முடித்தற்கு ஏதுவறியாதவர்களாகி அரசனிடம் விடைபெறுது சாதுரியமாக அங்குநின்றும் நீங்கி இல்லந்தேடிப் போயினர். அங்கு நிகழ்ந்தவைகளையெல்லாம் ஒற்றரால் அறிந்த காளிதாசன் நூதனகவிவாணன்போல் வேஷம்பூண்டு அவ்வித்துவான்களை இடைவழியில் நிறுத்தி அவர்களுடன் அளாவினான். அப்போது வித்துவான்கள் அரசன்சொன்ன சுலோகவடியைச் சொல்லி இதனை முடியும் பார்ப்போம் என அவனிடம் கடவினர். அதற்குக் காளிதாசன், பிரதமை தினத்துச் சந்திரன் எவ்வாறு சமமாகு" மென்னுங் கருத்தமைத்து,

"அணு இதிபம்ண யதிகஹ அணுஇதம் ஸம் பதி பதி சதப்ஸ]]"

என்னும் உத்தரபாகத்தைச் சொன்னான் அரசன் யாதொரு தக்க காரணமுமின்றிப் பூர்வபாகத்தைச் சொல்லாமை என நாம் கொண்ட மயக்கமன்றோ எம்மைக்கெடுத்தது. எப்படியிருக்கினு மிருக்குக என்றுகூறி, இவ் வுத்தரார்த்தத்தை வித்துவான்கள் மனனம்பண்ணிக்கொண்டு, அந் நூதனகவிவாணரைப் பார்த்து, நீர் நாளை உதயத்தில் அரமனைவாயிலில் வந்திரும் என்று கூறிவிட்டுச் சந்தோஷத்துடன் தத்தம் வீடுகளுக்குச் சென்றார்கள். அடுத்தநாட் காலையில் வித்துவான்கள் அரசனுடைய அவைக்களம்புகுந்து தாங்கள் மனனம்பண்ணிவந்த சிலோகபாகத்தைக்கூறிப் பிரசங்கிக்க, அரசன் மகிழ்ந்து இர காளிதாசன் வாக்கே என நிச்சயித்துப் பதினைந்துலக்ஷம் கபான் பரிசளிக்குமாறு ஆஞ்ஞாபித்துவிட்டு, சேவகரை அழைத்து, அரமனைவாயிலில் வித்துவான்களுக்கிடையே யாதேனும் பிணக்கு நிகழுமாயின் அவர்களெல்லோரையு மொருங்கே கொணர்மின் என இரகசியமாய்க் கட்டளையிட்டான். அப்பால் வித்துவான்கள் அப்பதினைந்துலக்ஷம் பொன்னையும் பெற்றுக் கொண்டு அரமனைவாயிலை யடைந்தார்கள். அங்கே காளிதசனாகிய நூதனகவிவாணன் தனக்குரிய சிரேஷ்டபாகத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டு அப்பாற் செல்லுமாறு கேட்டான். அதுகேட்ட வித்துவான்கள் சிரேஷ்டபாக முனக்கு எவ்வாறு வருமென்று வாதிக்க, கலகமெழுந்தது. அதுகண்ட சேவகர் அவர்கள் யாவரையும் ஒருங்குபற்றி அரசன்முன்னர்க் கொடுபோய்விடுத்தனர். அங்கே கபடமெல்லாம் வெளியாயின. வெளியாகவே, அரசன் காளிதாசனை யுணர்ந்து அவன் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து "யான் ஆராயாதுபுரிந்த பிழைகளைப் பொறுப்பீராக" என்று வேண்டினன். வேண்டவே, காளிதாசன் தனது மெய்வடிவைக்காட்டி அரசனைத் தழுவ, அன்புபெருகி இருவரும் அந்தப்புரஞ்சென்று லீலாவதி முன்னிலையில், ஊடிப்பிரிந்தார் கூடிப்பிரிந்தாற்போலச் சொண்டாடி மகிழ்ந்திருந்தனர்.

இவ்வாறு சிலகாலங் கழிந்துவருகையி லொருநாள், பவபூதி என்னுமொரு மகாபண்டிதன் அரசன்சபைக்கு வந்து, அங்கே தனக்குச்சமமான வித்தவான் எங்குமில்லையென்று தருக்கிக்கூற அங்கிருந்த பாணகவி எழுந்து நகைத்து, பவபூதி! பகைவரையகற்ற

வல்லபாண மிங்கிருப்பதைக் கண்டிலைகொல்லோ என்றான். அது கேட்ட பவபூதி, பாணு! இங்கிருக்கும் காளிதாசகவிதானும் எனக்கு நிகராகான் என்றால், நீயோ வெனக்கு நிகராவா யென்றான். அதுகேட்ட காளிதாசன், ஏ! பவபூதி! எண்ணிப் பேசக்கடவை. வித்துவான்களால் நிறைந்திருக்கும் இச்சபைக்கு நாயகமாகச் சிவபிரான்போல் வீற்றிருக்கும் இராசேந்திரனே நம்மிருவரையும் சீர்தூக்கித் தாரதம்மியங்களையறிய வல்லவன் என்றான் அதுகேட்ட அரசன் அவர்களைநோக்கி, சுரதகாலத்தை வருணிப்பீர்களாக என்றான். அவ்வாறே இருவரும் உடன்பட, முதலிலே பவபூதி வருணிக்கத்தொடங்கினான், அதுவருமாறு:—"சந்திரவிம்பம் முத்துக்களாலலங்கரிக்கப்பட்டது ஆகாசத்தில் நக்ஷத்திரங்கள் பரவின. மதனவில் அசையாது நின்றது. மந்தமாருதம் ஒய்ந்தது. சண்பகக்கொடி யசைதலொழிந்தது பின்னர் எவ்வாறாயினவோ அறியேம்" என்னுங் கருத்துள்ள,

"முக்தாபூஷணமிந்து பிம்பமஜனிவ்யாகீர்ண தாரம்நப: ஸ்மாரம்சாபமபேத: சாபலம்பூதிந்தீவரே முத்ரிதே| ல்யாலீனம்மலகண்டமந்தாணிதம் பந்தாநிலோர்மந்திகம் நிஷ்பம்தஸ்தபகாச சம்பகலதா ஸாபூந் நஜாநேதத:11"

என்னுமிச்சுலோகத்தைச் சொல்ல, காளிதாசன் எழுந்து, அரசனே, என் கவியைச் சற்றே கேட்குக, என்று விண்ணப்பித்து, "சந்திரமண்டலம் வியர்த்தது, பூமாலைபாற் கட்டுண்ட விருடகுலம் குலைந்தது. முன்னரே, தாழப்பூ மந்தஹாசஞ்செய்யத் தலைப்பட்டு விட்டது. 'குண்டலநிர்த்தனம் ஒய்ந்தது. நீலோற்பலமிரண்டும் குறுக்காகச் குவிந்தன. பவளவோசை உள்ளடங்கினது- பின்னர் யாது நிகழ்ந்ததோ அறியேம். சந்திரனால் விழுங்குண்ட இருள் இவ்வகைத்து" என்னுங்கருத்துள்ள,

ஸ்விந்நம் மண்டல மைந்தவம் விலுலிதம் ஸ்ரக்பாரநத்தம்தம; ப்ராகேவ ப்ரதமானகைதகசிகா லீலாயிதம் ஸுஸ்மிதம்| சாந்தம்குண்டலதாண்டலகுவலயத்வந்த்வத் திரேமீலிதம்வீதம்வித்ருமவீக்ருதம் நஹிததோஜநேகிமாவீ திதி11

என்னுமிச் சுலோகத்தைச் சொன்னான்.

இருவர் சுலோகத்தையும் கேட்ட அரசன் அவ்விரண்டினையுஞ் சீர்தூக்கிப் பார்த்து, பவபூதி கவிவாணனேயன்றிக் காளிதாசகவிக்

கு இணையாகானென்றான். அதுகேட்ட பாணகவி, காளிதாசனைப் பின் யாவனென்பீர் என்ன, அவன் சரசுவதியின் அமிசாவதாரியெ ன, அங்கிருந்த பவபூதி கோபாவேசனாய் அரசனைப் பார்த்து, நன் றுகூறினை! பக்ஷபாதகம் பண்ணுகின்றனையே யென்றான். அப்போ து காளிதாசன் அரசனைநோக்கி, மண்டலேசா, இவ்வபகீர்த்தி உனக்கு வேண்டாம். புவனேஸ்வரி யாலயத்திற்குப்போய், அவள் சந்நிதியில் ஒரு தராசில் இருவர் சுலோகத்தையுமிட்டு நிறுக்க எது தாழ்கின்றதோ அதுவே சிறப்புடையதென ஒருபக்ஷம் துணிவோம் என்ன, அரசனும் நன்றெனக்கண்டு புவனேஸ்வரி யாலயத்திற்கு யாவருடனும் எழுந்து சென்று, அங்கே ஒரு தராசையெடுத்து நாற்றி, அதில் இருவர்சுலோகத்தையுமிட்டு நிறுத்தான். அப்போது காளிதாசனுடைய கவிவைக்கப்பெற்ற தட்டுத் தாழ்தலும், புவனே ஸ்வரி தானணிந்திருந்த மாலையினின்றும் உதிர்ந்து திருமேனியிற் படிந்துகிடந்த பூஞ்சுண்ணத்தை நகத்தினால் எடுத்துப் பவபூதியி னுடைய சுலோகமிருந்த தட்டிலிட்டு இரண்டையுஞ் சமமாக்கினாள். அதுகண்ட காளிதாசன் புவனேஸ்வரியைப் பார்த்து, "ஏ! கரு ணாகடாக்ஷி! சிறியேன் பாக்கியமே பாக்கியம். அடியேனும் பவ பூதியும் மலைவுற்று, என் சுலோகத்தையும் பவபூதியின் சுலோகத் தையும் தராசிலிட்டு நிறுக்கும்போது, அவனுடைய தட்டு மேலெ ழும்பியதுகண்டு, அவன் உன்னிடத்து வைத்த பத்தியினால் அவன் மேல் நீ கொண்டிருக்கும் அன்பு இத்துணையதென்று காட்டு மாறு உனதுமேனியிற் படிந்து கிடந்த மகரந்தத்தை எடுத்து இட் டுத் தட்டைச் சமமாக்கினையே. பக்தவற்கலை யென்பதை இன்று கண்டேன் என்று துதித்தான்" அத்துதிசுலோகம்:—

"அஹோமே ஸௌபாக்கியம்மமசபவபூதேஸ்சபணிதம்தடாயா மா ரோப்ய ப்ரதிபலதிதஸ்யாம லபிமநிஸிராம்1 தேவீஸத்ய ஸ்ருதிகலிதகல் ஹார கலிகாமதூளீ மாதுர்யம் க்ஷிபதிபரிபூர்த்யை பகவதீ!!"

என்பது, இதுகேட்ட பவபூதி அடியற்ற மரம்போலக் காளி தாசனுடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரிக்க, காளிதாசன் நீ சுரதகாலத்தைக்குறித்து வருணித்த சுலோகத்தில் அக்காலத்து ரிமைகளு ளொன்றாகிய தாழம்பூவின் செய்தியைக்கூற மறந்தனை யாதலின், உன்கவி என்கவிக்குச் சமமாகாது போயிற்றென்ன,

அவனும் மெய்யேயென்று ஒப்பினான். அப்பால் அரசன் இருவரையும் தகுதிக்கேற்பச் சன்மானித்து நடாத்திவந்தான்.

இப்படி வருகையி லொருநாள் அரசன் காளிதாசனைநோக்கி, உமது வாயால் உதயகாலத்தை வருணிப்பீராக வென்ன, காளிதாசன் நன்றெனவெழுந்து, "ஓர் இரசவாதி தான்செய்யும் வாதத்தினாலுண்டாகும் பஸ்மத்தை உண்டு திறம்பெற்றாற்போல, கீழ்த்திசை பொன்ரேகையைப் பொருந்தியது. மூடர்கூட்டத்தி லகப்பட்ட கலைவலானைபோன்று சந்திரன் விளங்கினான். முயற்சியற்ற அரசர்போலத் தாரகாகணம் ஒளிமழுங்கி மறைந்தது. வணக்கமற்றவர்களுடைய மனம்போலத் தீபங்கள் பிரகாசித்தன" என்னுங் கருத்துள்ள,

"அபூத்விம்காப்ராசீரஸபதிரிவப்ராஸ்ய கநகம் கதச்சாயஸ்சம்தோபுதஜன இவஸ்ராமியஸ்தவி1 க்ஷணைத்க்ஷீணாஸ்தாராந்ருபதய இவாநுத்யமபராநமிவாராஜம்தேவிநயரகிதாநாமிவசுணா॥

என்னுமிச் சுலோகத்தைச் சொன்னான். அதுகேட்ட அரசன் மகிழ்ந்து அக்ஷரத்துக் கோரிலக்ஷம் பொன்னாகப் பரிசளித்தான்.

மற்றொருநாள் அரசன் காளிதாசனைப்பார்த்து உமக்குச் சரஸ்வதியினது அருள் மிகுதியுமுண்டென்ப துண்மையாயின், நான் இங்கிருந்தபடியே சாகுமாறு பாடுமென்றான். அதுகேட்ட காளிதாசன் பதைபதைத்து, பூலோகரக்ஷகா! யாதுகூறினாய்; உயிரைப் பிரிந்துடல் நிற்குமாயினன்றோ நானுன்னைச் சாகுமாறு பாடுவேன். அஃதொழிய வேறு யாதுகூறினும் செய்வேன். அதனை மறந்தருள் என்றான். என்றாலும், அரசன் சினந்து என் சமுகம்விட்டகலக்கடவை என்றான். உன்னை இறக்கப் பாடுவதினும் அகன்றிருப்ப தெனக்குப் பெரும்பாக்கியமென்று காளிதாசன் கூறிக்கொண்டு அந்நாட்டை விட்டகன்று அதற்கணித்தாகிய ஒருசிற்றூரை யடைந்து அங்கே வாசஞ்செய்வானாயினான். சிலகாலமாயின பின்னர், அரசன் காளிதாசனது ஞாபகம் வரப்பெற்று, அவனைத் தேடுமாறு வேற்றுருத்தாங்கி ஊர்கள்தோறுஞ் சென்று ஆங்காங்குஞ் சிறிது சிறிதுகாலந் தங்கி, ஈற்றிலே காளிதாசன் வாசஞ்செய்

திருக்கும் சிற்றூரை யடைந்தான். அங்கே காளிதாசன் கடைவீதி வழியே செல்லும்போது வேற்றுருத்தாங்கிய அரசன் எதிர்ப்படக் கண்டு, தன்னால் முன் ஒருபோதும் அவ்வூரிலே காணப்படாதவனாகத் தோற்றலின், நீ எவ்வூரானென்றான். அரசனும் அவனையுணராது, யான் தாராபுரிவாசி யென்றான். அதுகேட்டு அரசன் க்ஷேமாதிகளெப்படி என்று காளிதாசன் வினவினன். அதுகேட்ட அரசன், காளிதாசனைக் கண்டுணரும்படி தான் உபாயமாக எதிர்ப்பட்டார் யாவரிடத்தும் வழக்கமாகக் கூறுகின்றபடி காளிதாசன் இறந்து வெகுநாளாயினவே என்றான். அவ்வாசகம் காளிதாசன் செவிக்குக் காய்ச்சிய லோகநீராக, பதைபதைத்து, "தாராநகரம் நிராதாரமாய்த் தத்தளிக்கவும், சரஸ்வதி கொள்கொம்பற்ற கொடிபோல் வருந்தவும், பண்டிதர்கள் ஒருங்கே நல்கூரவும் போஜன் இறந்தானே!" என்னுங் கருத்துள்ள,

அந்யதாரா நிராதாரா நிராலம்பா சரஸ்வதீ1 பண்டிதாகண்டிதாசர்வே போஜராஜாதிவங்கதே.

இச்சுலோகத்தைச் சொன்னான். சொற்றலும் பொய்யாவாக்காதலின் அரசன் இறந்து கீழே விழுந்தான். அதனைக்கண்டலும் காளிதாசன் முன்னையிலும் பதின்மடங்கு நடுநடுங்கி அவனே அரசனென வுணர்ந்து என்பொருட்டா ஈதடைந்தனை! என்போலும்பாவி யாவன்? எனக்கவன்று, அவனைத்தூக்கி மார்போடணைத்துக் கொண்டு, முன்பாடிய சுலோகத்துக்கு மறுதலையாக,

அந்யதாரா சதாதாரா சதாலம்பா சரஸ்வதீ1 பண்டிதாமண்டிதாசர்வே போஜராஜாபுதங்கதே.

என்னுமிச் சுலோகத்தைச்சொல்ல, அரசனுயிர்பெற்றுத் தானும் எதிர்தழுவினன். அப்பால் இருவரும் அவ்வூரைவிட்டுத் தாராநகரஞ் சேர்ந்தனர்.

அப்பால் ஒருநாள் அரசன் வீதிவலம் வரும்போது ஒருத்தமி நெற்குத்திக்கொண்டிருந்தாள். அதுகண்ட அரசன் உலக்கையைப் பார்த்து, ஏ முசலமே! ஏன் தளிர்க்காதிருக்கின்றனை என்னுங் கருத்துள்ள "முசலகிசலயம் தேதத்க்ஷணாத்யந்நஜாதம்" என்றவடியை மனத்திலெண்ணிக்கொண்டு சபைக்குவந்து, காளிதாசனுக்கு

அவ்வடியைச் சொல்ல, அதற்குக் காளிதாசன் உத்தரமாக, அழகும் கற்பும் ஒன்றுகூடி உருவெடுத்துள்ள உத்தமியினுடைய பூங்கரத்தால் தழுவப்பெற்றும் அம்முசலம் தளிர்த்ததில்லை. அது காட்டிற் பிறந்ததன்றே. காட்டிற் பிறந்தவர்கள் சுகமறிவார்களோ! அறியார்கள். ஆதலினன்றோ கிட்டற்கரிய உத்தமிகையால் தழுவப்பட்ட களிப்பினலாயினும் அது தளிர்த்ததில்லை என்னுங் கருத்துள்ள,

"ஜகதிவிதிதமேதத்காஷ்டமேவாஹி நூநம்ததபிகிலஸத்யம்காநநேவாத் திதோஹி| குவலயதளநேத்ரீ பாணிஸம்ஸோத்ஸவேஸ்மிந்முஸலகிஸலயம் தே தத்க்ஷணாத்யந்நஜாதம்||"

என்னும் சுலோகத்தைச் சொன்னான். அப்பால் ஒருநாள், ஒரு தீர்த்த யாத்திரிகன், அரசன் சமுகத்தில் வந்து, உம்மிடத்துள்ள வித்துவான்களை என்னோடு கங்காஸ்நானத்திற்கு அனுப்புதல் வேண்டுமென்ன, அரசன் அதற்கிசைந்து விருப்பமுள்ளோர் எல்லோரும் போகுக எனப் பொருளுங் கொடுத்து ஆஞ்ஞைசெய்தான். அவ்வாறே எல்லோரும் போகக், காளிதாசன் மாத்திரம் போகாது அங்கேதானே யிருப்பானாயினான்,

அடுத்தநாட்காலையில் வழக்கம்போலக் காளிதாசகவி சபாமண்டபம் புகக்கண்ட அரசன், வித்துவான்கள் எல்லோரும் கங்காஸ்நானத்தின்பொருட்டுக் காசிக்குப் போய்விட்டார்களே, நீர்மாத்திரம் போகாது தங்கிய காரணம் என்னை என்று காளிதாசகவியைக் கேட்க, அதற்குக் காளிதாசகவி அரசனைப்பார்த்து, சகலசாஸ்திரங்களையும் அலைவறக்கற்றுத் தெளிந்த நீர் இங்ஙனம் என்னைப் பார்த்துக் கேட்டது எனக்குப் பேராச்சரியத்தை விளைக்கின்றது. எவனுடைய இருதயகமலத்தில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்றாரோ அவனிடத்திலேயே சகல தீர்த்தங்களுமிருக்கின்றன. எவனிடத்திலே சிவபெருமான் கோயில் கொள்ளவில்லையோ அவனே தீர்த்தயாத்திரை முதலியன செய்தற்குரியவன் என்னுங் கருத்துள்ள, "தேயாம்தி தீர்த்தேஷு பிரதாயேசம்போர்த்தூரஸர்த்திரம, யஸ்யகௌரீஸ்வரஸ் சித்தேதீர்த்தம் போஜபரம்ஹிஸ!" என்னுமிச்சுலோகத்தைச் சொல்ல அரசன்கேட்டு மகிழ்ந்து மௌனஞ்சாதித்தான்.

இப்படியே அரசன் நாள்தோறும் காளிதாசனுடைய வாயினின்றும் வெளிப்படும் அருப்பொருட்கவிகளாகிய நறுந்தேனைச் செவிவாயிலாலே பருகிக் களித்து வருகையில், அரசன் சமுகத்துப் புன்கவிஞர்செய்த வஞ்சச்சூதினால் காளிதாசன்மீது அரசன் மீண்டும் அதிர்ப்திகாட்ட நேர்ந்தது. அதனைக் காளிதாசன் அறிந்து அரசனுடைய நகரைவிட்டு வெளிப்பட்டு அல்லாளதேசஞ் சென்று, அத்தேசத்தரசன் சபையிற் புகுந்து அங்குத் தன்வரலாற்றைச் சொல்ல, அரசன் மகிழ்ந்து நீர் போஜராஜனிடத்திலிருந்து பெற்ற சன்மானத்தினும் முப்பட்டங்கதிகமான சன்மானத்தோடு மிங்கேதானே இருக்கக்கடவீர். உமது கீர்த்தி எனது காதுக்கெட்டிய நாண்முதலாக உம்மைக் காணவேண்டுமென்று நான் கொண்ட பேரவாவுக்கு உமது வரவால் இன்று எல்லைகண்டேன் என்று பலவாறு முகமன்கூறி யுபசரித்துத் தன் பக்கத்திலிருத்தி, கவிஞரேறே! என் கவிக்கலிதீர ஒரு கவி சொல்லியருளு மென்றான். அவ்வாறே காளிதாசனும் எழுந்து, சபையை வந்தனங்கூறி யடக்கி, அரசனைப்பார்த்து, "நரேந்திரா, உமது பகையரசனுடைய பட்டணத்திலே சஞ்சரிக்கின்ற ஒரு வேட்டுவமாது, வீதிகளிலே சிந்திக்கிடக்கின்ற இரத்தினங்களைக் கருங்காலிக்கட்டையி லுண்டாய தழலென வெண்ணிச் சாம்பிராணியை அத்தழலிலிட்டுக் கண்ணைமூடி ஊத, அவள் வாயினின்றும் வரும் சுவாசம் நறிய வாசனையாய்க் கமழ, அஃதுணர்ந்த வண்டுகள் அச்சாம்பிராணியின் மேல்வந்து மொய்க்க, அவற்றைப் புகையென்றெண்ணுகின்றாள்" என்னுங் கருத்துள்ள,

"அலலாள க்ஷோணிபாலத்வதஹித நகரேஸஞ்சரந்தீகிராதீ
கீர்ணாநாதாயரத்நாந்யுருதரகதிராங்காரசங்காகுலாங்கீ। க்ஷிப்த்வா ஸ்ரீகண்டக
ண்டம் ததுபரிமுகுளீ பூதநேத்ரா தமந்தீ ஸ்வாஸாமோதாநுயாதைர்மதுக
ரநிகரைர்த்தூமஸமகாசபிபர்த்தி॥"

என்னுமிச் சுலோகத்தைச் சொல்ல, அரசன் மகிழ்ந்து அக்ஷரத்துக் கோரிலக்ஷமாகப் பொன்னைவாரி வழங்கினான். அப்பால் காளிதாசன் அவ்வல்லாளதேசத் தரசனிடத்திற்றானே மிக்க சம்பிரமமாக விருந்து விளங்கிவருநாளில், தன்னைக் காளிதாசன் பிரிந்தவன்றே அவன்பின்னே செல்லப்பெற்ற கருத்தினனாய்த் தாரா

நகரத்தி லரசுபுரிந்திருந்த போஜமகாராஜன் காளிதாசனுடைய பிரிவைச் சகிக்கமுடியாதவனாகி, தனது பிரதானியொருவனை அல்லாள தேசத்துக்குப் போக்கிக் காளிதாசனை அழைத்துவருமாறு ஆஞ்ஞாபித்தான். அவ்வாறே அப்பிரதானி காளிதாசனிடஞ் சென்று கருத்தை வெளியிட, காளிதாசன், தான்கொண்டிருந்த கோபங்கணிந்து போஜனிடஞ் செல்ல ஒருப்பட்டவனாகி, அல்லாளநாட்டு வேந்தனிடஞ் சென்று பிரியாவிடை பெற்றுக்கொண்டு, போசனுடைய நகரஞ்சார்ந்து உத்தியானவனத்திற் போயிருந்தான். அதனை அறிந்த போஜன் அங்கேபோய்க் காளிதாசனை வணங்கி உபசரித்தான். அவ்வளவில் இருவரும் முன்போல நேசராகி அந்தப்புரஞ் சென்றார்கள். அங்கே காளிதாசன் விருந்தருந்தி ஆசிகூறி விடை பெற்றுத் தனது பிரியைவீட்டுக்கேகிச் சுகித்து முன்போலக் காலங் கழிவு செய்துவருகையில், ஒருநாள் அரசன், பரத்தை கவரி வீசக் காளிதாசனைப் பக்கத்திருத்தி மஞ்சத்தின்மீது படுத்திருப்பானாயினன். அப்போது காளிதாசன் அவ்வேசியைப்பார்த்து வருணிக்கத்தொடங்கி,*"கூந்தலைப்பார்த்து ஸ்தனங்கள் அஞ்சுகின்றன. $ஸ்தனபாரத்தைக்கண்டு கூந்தல் அஞ்சுகின்றது. %கசமும் குசமுமாகிய அவ்விரண்டையுங் கண்டு அல்குல் அஞ்சுகின்றது, மதிமுகத்தாளே இவற்றையெல்லாஞ் சந்திசெய்து பரித்து நிற்கும் உனது வல்லமை வியக்கற்பாலதே" என்னுங் கருத்துள்ள,

கசபாராத் குசபார: குசபாராத்பீமேதிகசபார:| கசகுசபாராஜ்ஜநம்
கோயம் சந்த்ராநநேசமத்கார||

---

*கூந்தலைப்பார்த்து ஸ்தனங்கள் அஞ்சுகின்றன என்பது எங்ஙனமோவெனில்—கூந்தல் மேகத்துக்கும் ஸ்தனங்கள் மணற்குன்றுகளுக்கும் உவமிக்கப்படுவனவாக, மழைபெய்யின் மணற்குன்று அழிதல் இயல்பென்னுமேதுப்பற்றியென்க.

$கூந்தல் ஸ்தனங்களைக் கண்டஞ்சுகின்றது என்பது எங்ஙனமோவெனில்:—கூந்தல்-கரும்பாம்பு, ஸ்தனம்-யானை, யானைக்குப் பாம்பு அஞ்சுவதுபற்றியென்க.

%கசகுசங்களாகிய அவ்விரண்டையுங்கண்டு அல்குல் அஞ்சுவது எங்ஙனமெனில்:—கசம்-கூந்தல் கூந்தலுக்குக் கொன்றைக்காய் உவமை. குசம்-ஸ்தனம். ஸ்தனத்துக்குக் குடமுவமை. அல்குல் பாம்புக்குவமை. ஆகவே பாம்பு கொன்றைக்காயைக்கண்டு சத்துருவென்று திரித்துணர்ந்தஞ்சுதலும், குடத்திலடங்குதலு மியற்கையாதலினென்க.

என்னுமிச் சுலோகத்தைச் சொல்லக்கேட்ட அரசன், நானும் சொல்லுகிறேன் கேட்பீராக என்றுகூறி, *முகத்தைக்கண்டு பாதங்கள் பீதியடைகின்றன, ‡ வார்த்தையினால அதரமும் தந்தபங்திகளும் அச்சமெய்துகின்றன, *** கசமும் குசமும் நயனமும் இடையைக்கண்டு பயமடைகின்றன என்னுங்கருத்துள்ள,

வதநாத்பதயுகளீயம் வசநாததரஸ்சதந்தபங்திதஸ்ச| கசத: குசயுகளீயம் லோசனயுகளம் சமத்யதஸ்த்ரஸதி||

என்னுமிச்சுலோகத்தைச் சொல்லி என்னுடையதே சிறப்புடையது என்று அரசன் கூற, காளிதாசன் தன்னுடையதே சிறப்பாண்மிக்கது என்ன, இருவரும் போலிமலைவுற்றுக் களித்தனர். அப்பால் ஒருநாளிரவில் அரசன் நகர்ச்சோதனையின்பொருட்டு வீதிகள்தோறுஞ் சென்றுலாவி வருகையில் ஒருவீட்டிலே ஒரு பிராமணன் தனது மனைவியினது மடிமீது தலையைவைத்துச் சயனிப்பதையும், அப்பார்ப்பனிக்கருகிலே ஒரு மகவு சந்தனக்குழம்பு நிறைந்த தங்கப்பாத்திரத்தில் விழுந்து விளையாடுவதையுங் கண்டு மனத்திற் குறித்துக்கொண்டு, அதனைபறைத்த, அக்கினிமயமாகிய அனற்சட்டியெனச் சுட்டிக் தனது வித்துவான்களுடைய விவேகத்தைப் பரீக்ஷிக்குங் கருத்துடையனாகி, மற்றைநாட் காலையில் சபைக்கு வந்தபோது வித்துவான்களை விளித்து, சென்ற இரவில் நாம் நகர்வலம் வந்தபோது ஒருவீட்டிலே ஓரந்தணன் தனது

---

* முகத்தைக்கண்டு பாதங்கள் அஞ்சுதல் யாங்ஙனமோவெனில்:— சந்திரனைக்கண்டு தாமரை கூம்புதலியற்கையாதலாலென்க.

‡வார்த்தையினால் அதரமும் தந்தபங்திகளும் அஞ்சுதல் எங்ஙனமோவெனில்:—கிளிமொழியைக் கேட்ட கொவ்வைக்கனியும் மாதுளம்வித்தும் அஞ்சுமென்பது கிளிக்கு அவை உணவாதல்பற்றியெனும் வருணனையாலென்க. கொவ்வைக்கனி அதரத்துக்கும் மாதுளம்வித்துப் பல் வரிசைக்கும் உவமைகள்.

*** கூந்தலுக்கு இருளுவமை. இடைக்கு மின்னுவமை. மின்னல் இருள் கெடுதலால் கூந்தல் இடைக்கஞ்சுமென்றதென்க. இனி, குசத்துக்கு யானையும் இடைக்குச் சிங்கமுமுவமையாதலின் சிங்கத்துக்கு யானை யஞ்சுமென்க, கண் மானுக்குவமையாதலின் மான் சிங்கத்தைக்கண்டஞ்சுதலியற்கை,

மனைவியினது மடியிலே தலையைவைத்து நித்திரைபோக, அவன்மகவு பக்கத்திலிருந்த ஒரு கனற்சட்டியிலே விழுந்து விளையாடக்கண்டேம் என்று கூற, அதுகேட்ட காளிதாசன், நீர் கூறியது நெருப்பேயாகுக; ஆதனால் நீரடைந்த ஆச்சரியம் ஆச்சரியமன்று: பதிவிரதையானவள் தனது மடியில் நாயகன் நித்திரைசெய்ய, அவளுடைய மகவு சமீபத்திலிருக்கும் அனற்சட்டியில் விழுந்து விளையாடுகினும் அஞ்சுவளோ? அஞ்சாளே! எங்ஙனமெனில் அக்கினிபகவான் தான் அம்மகவைத் தகிக்கின் தன்னைப் பதிவிரதாக்கினி தகித்துவிடுமேயென அஞ்சுவனன்றோ என்னுங்கருத்துள்ள,

ஸுதம்பதம் தமரஸமீக்ஷபபாவகேந, போதயாமாஸபதிம் பதிவ்ரதா
ததாபவத் தத்பதிபக்திகௌரவாத் ஹுதாசநஸ்சந்தநபங்கசீதல||

என்னுமிச் சுலோகத்தைக்கூறிச் சந்தனமென அரசனுடைய குறிப்பையும் சுட்டாது சுட்டினான். இதனைக்கேட்ட அரசன் கழிபெரும் மகிழ்ச்சியில் பரவசனாகிக் காளிதாசனைப் பற்றுக்கோடாகத் தழுவிநின்று ஏற்றில் தெளிந்தான்.

இவ்வாறு வருகையில், போஜனுடைய நாட்டிலே காட்டுமிருகங்கள் வந்து பயிர்முதலியவைகளை அழிக்கத்தலைப்பட்டன. அதுகண்டு பிரசைகள் அரசனிடம்போய் முறையிட்டார்கள். குடிகளுக்குவந்த துன்பத்தைத் தனக்குவந்ததாக நோக்குமியல்பினனாகிய போஜன், குடிகள்சொன்ன குறையைக்கேட்டுச் சிறிதுநேரமுஞ் சகிக்கவாற்றாது உடனே வேட்டைக்காயத்தனாகி நகரத்தைவிட்டு வெளிப்பட்டு,காடுகள்தோறுஞ் சென்று மிருகங்களைத் தேடி வதஞ்செய்து கொண்டும், வேடரால் பல மிருகங்களை வலைப்படுத்திக்கொண்டும் பாணத்துக்கும் வலைக்கும் தப்பிக் காடுபோய் அடைந்த மிருகங்களைத் தொடர்ந்து காட்டிற் புகுந்தான். அங்கே நெடுநேரமாக வேட்டஞ்செய்தமையால் தாகமீதூரப்பெற்றுத் தடாகந்தேடி நீரருந்தி அதன் சார்பிலுள்ள சோலையிலிருந்து களைநீக்கினான். அப்பொழுது ஒரு குரங்கு ஒரு நாவல்மரத்திலேறிக் கொம்புகளை அசைத்துத தனது இயற்கைக்குணத்தைக் காட்ட, அக்கொம்புகளில் பழுத்திருந்த பழங்கள் அத்தடாகத்து நீரிலே குளுகுக் குளுகுக் குளு என விழுந்தன. பச்கத்திலிருந்த அரசன் அவ்வொலிக்குறிப்பை மனனம்பண்ணிக்கொண்டு காட்டினின்றும் மீண்டு

நகரஞ்சேர்ந்தான். அடுத்தநாட் காலையில் அரசன் சபைக்குவந்து தான் காட்டிலிருந்து அவதானித்துவந்த ஒலியை "குளுதக் குளு குக் குளு" என்று ஒரு சுலோகபாதக் கூறுபோலச் செய்து இதனைப் பூரணஞ் செய்வீர்களாக வென்று வித்துவான்களிடம் கூறிக் கேட்டான். அதுகேட்ட வித்துவான்களெல்லோரும் இஃதென்னை யென்று பரிகசித்து மயங்கித் திகைக்க, காளிதாசனெழுந்து ஐயனே! நீர் குறித்தது, பழுத்த கனிகளால் நிறைந்திருந்த நாவல் மரத்திலே குரங்கேறிக் கொம்புகளைக் கம்பிதஞ்செய்ய அதன் பழங்கள் நீரிலேவிழுந்த ஒலிக்குறிப்பேயாம், என்னுங் கருத்துள்ள,

"ஜர்பூபலானி பக்வானி பதந்தி விமலேஜலே।
கபிகம்பித சாகாப்யோ குளுதக் குளுதக் குளு॥

வாவிக் குளேநாவல் வான்கொம் பிருந்தகவி
தாவிக் கனியுதுத்த தன்மைகாண்—மேவிக்
களகளவென் றுலிக்குங் கங்கைநீர் நாடா
குளுதுக் குளுகுக் குளு.

என்னுமிச் சுலோகத்தைச் சொன்னான். இதைக் கேட்டமாத்திரத்தில் அரசன் அன்பாலும் அச்சத்தாலும் மெய்நடுநடுங்கி நாத்தழுதழுத்து ஆநந்தக்கண்ணீர் பொழியக் காளிதாசனுடைய பாதங்களில் விழுந்து, குருநாதா, இன்றே உனது மெய்வடிவை யுணர்ந்தேன். பிறர்மனத்திலுள்ளதை யோர்ந்து சொல்லும் வல்லமையுடைய உன்னைச் சாமானிய நரனாகிய என்னுடன் சமமாக்கி வைத்திருந்த என் அறியாமை இருந்தவாறென்னை? எனப் பலவாறு துதித்துக் கொண்டாடினான்.

அப்பால் முன்பனிக்காலத் தோரிரவில் குளிர்வாடையால் நலிவுற்ற அரசன், கனற்சட்டியை யணுகிக் குளிர்காய்ந் திருக்கும்போது, அக்கனற்சட்டியை யெவ்வாறு வருணிக்கலாமென்று சிந்தித்துப் பார்த்தும் தக்கவாறு புலப்படாமையால், நாளையுதயத்தில் இதனைக் காளிதாசனிடங் கேட்போமென்று முடிவுசெய்து குளிர்நீங்கியபின் படுத்துறங்கி, விடிபற்காலத்திலெழுந்து, நித்தியகடன்களை

முடித்துக்கொண்டு சபையிற் பிரவேசித்து, காளிதாசனைப்பார்த்து, கவிசிரேஷ்டரே! உமது திருவாக்கால் கனற்சட்டியை வருணிக்குமாறு பிரார்த்திக்கின்றேன் என்றான். நன்றெனக் காளிதாசனுமெழுந்து அரசனைப்பார்த்து, "மண்டலாதிபதி, கனற்சட்டியானது இருப்பினு லமைக்கப்பட்டதாயினும், அதனிடத்துள்ள விசேஷகுணங்களினால அதனை வித்துவான்களினது மனத்துக்குவமிக்கலாம். எவ்வாறெனில் வெகுலோகையா யிருத்தலாலெங்க (பகுலோஹா என்பது, பகு-லோகா எனவும், பகுல-ஊஹா எனவும் இருவகையாகப் பிரிக்க, முறையே மிகுவவிய லோகததாலமைந்த தெனவும், நுண்ணிய விவேக முடையவரெனவும் பொருள்படும்.) உஷத் காலத்துச் சூரியனுடைய தேர்க்கால் போலவும் கூட்டப்பட்ட சாதகப்புள்ளைப்போலவு மிருக்கின்றது (ஸு-கடிதசக்ரா என்பது பூட்டப்பட்ட தேர்ச்சக்கரமெனவும், கூட்டப்பட்ட சாதகப்புள்ளெனவும் பொருள்படும்) இன்னும் கனற்சட்டியானது நீறு பூத்த தழல்போலும் திருமேனியையுடைய சிவனுக்கும் சமமாகத்தக்கது" என்னுங் கருத்துள்ள,

"கவிமதிரிவ பஹுலோஹா ஸுகடித சக்ராப்ரபாதவேளேவ॥ ஹரமூர்த்தி ரிவஹஸந்தீபாதி விதூமா கிலோபேதா॥"

என்னுமிச் சுலோகத்தால் வருணித்தான். அதற்காக அரசன் காளிதாசனுக்கு அக்ஷரமொன்றுக்கு லக்ஷம்பொன் மேரையாகக் கணக்கிட்டுப் பரிசளித்தான்.

அப்பால் ஒருநாள் அரசன் தனது பாரிகளுளொருத்தியாகிய கமலை யென்பவளுடன் சூதாடப்புகுந்து தான் தோற்கின் அன்றிரவு அவளுடைய அந்தப்புரத்தில் சயனிப்பன் என்று சபதமொட்டிச் சூதாடியபோது தோற்றான். அதனால், அன்றிரவு சந்திரமுகியினுடைய அந்தப்புரத்துக்குப் போகும் முறைக்கு மாறாகக் கமலையினுடைய அந்தப்புரம் போகவேண்டியவனானான். அச்சமயத்தில் பட்டத்துத்தேவியாகிய லீலாவதியும் தன்னுடைய அந்தப்புரத்துக்கு வருமாறுவேண்டி அரசன்பால் தூதுபோக்கினாள். இவ்வாற்றால் அரசன் அம்மூவரையும் எவ்வாறு திருப்திசெய்யலாகும் என்னும் சிந்தனையுடையனாகி ஒருதலைத்துணிபுமின்றி யிருந்தான். அடுத்

தநாட் காலையில் வழக்கம்போல அரசன் சபைக்குப்போய், அங்கிருந்த வித்துவான்களைப் பார்த்துச் "சென்ற இராமுழுதும் நித்திரையற்றேன்" என்னும் இவ்வளவேகூற, காளிதாசன் நிகழ்ந்தவைகளையெல்லாம் சுலோகமாக்கி எடுத்துக்கூறினன். அதுகேட்ட அரசன் வெள்கித் தலைகுனிந்தான்.

சிலநாட்கழிந்தபின்னர், புதிதாக அரசன் தான் அமைப்பித்த ஒருமாளிகையிற் குடிபுகுதவேண்டிப் பிரயத்தனங்கள் செய்தான். அப்பொழுது அம்மாளிகையில் ஒரு பேயிருத்தலையுணர்ந்த அரசன், அதனை அங்குநின்றும் ஒட்டவேண்டி, மாந்திரிகர்களை வரித்து, ஓட்டுமின் என்ன, அவர்கள் எல்லோரும் தம்தம் மந்திர வலியைக் காட்டியும், அதனை யகற்ற முடியாதவர்களாகி அப்பேய்க்கே இரையாகி மாண்டார்கள். அதனல் அரசன் மிக்க கவலையுடையவனகிக் காளிதாசனேடு அதனைக்குறித்துச் சூழச்சிசெய்ய, காளிதாசன், *ஐயனே, இதன்பொருட்டு நீர் கவலைவேண்டாம் நானே அதனை யோட்டவல்லேன் என்று அரசனுக்குத் திடமொழி கூறி அம்மாளிகைக்கேகி அங்கிருந்து புவனேஸ்வரியைநோக்கிச் செபம்செய்துகொண்டிருந்தான், அப்போது, பேய் சினந்தெழுந்து வந்து காளிதாசன்முன்னர் நின்று உலகம் தவிதம் என்னும் கருத்துள்ள,

"சர்வஸ்யத்வே"

என்னும் வாக்கியத்தைச் சொல்லிற்று,

இங்ஙனங்கூறிய பைசாசத்தைக் காளிதாசன்பார்த்து, செல்வம் வறுமை என்பவற்றிற்கு நற்புத்தி தீப்புத்தியே ஏதுவாகும் என்னுங் கருத்துள்ள,

"ஸுமதிகுமதி ஸம்பதாபத்திஹேது"

என்னும் சுலோகத்தைச் சொன்னன். அவ்வளவில் அப்பேய் மீண்டுபோய் இரண்டாஞ்சாமத்தில் திரும்பிவந்து, "விருத்தனும்

*இவ்வாறு ஒருமையில் விளித்து நீர் எனப் பன்மையிற் கூறுதல் வழுவேயாயினும் அவ்விளி உயர்வுகுறித்ததாதலானும்."சிவனேநீர்" என ஆன்றோரும் கூறிவிருத்தலானும் இழிக்காது.

ஆடவரும்" என்னுங் கருத்துள்ள ஓர் வாக்கியத்தைச் சொல்லிற்று. அதுகேட்ட காளிதாசன் இளம்பெண்கள் ஆடவருடைய சேர்க்கையால் விருத்தரை நீக்குகின்றார்கள் என்னுங் கருத்துள்ள,

"ஸஹபரிச யாத்யஜ்ய தேகாமி ரூப்ய"

என்னும் வாக்கியத்தைச் சொன்னான். உடனே அதுபோய் மறைந்து மூன்றாஞ்சாமம் தோன்றி, ஏககோத்திரம் (ஏகோகோத்ரே) என்றது. அதற்குக் காளிதாசன், ஒருகுலத்திற் பிறந்தவன் என்பான் அக்குலமனைத்தையும் காப்பவனே என்னுங்கருத்தமைந்த,

"ப்ரபவதிபுமான்ய: குடும்பம் பிவதி"

என்னும் வாக்கியத்தைக் கூறப், பைசாசம் மறைந்தது. அப்பால் நான்காஞ்சாமத்தில் அப்பைசாசம் திரும்பிவந்து,

"ஸ்தீரீபுவச்ச"

என்றுகூற, அதற்குக் காளிதாசன், ஒரு ஸ்திரி புருஷனைப்போற் சகல அதிகாரத்தையும் வகிப்பவளாயின் வீடு நசிக்கும் என்னுங் கருத்தடங்கிய,

"ப்ரபவதியாதாதர்த்திகே ஹப்நஷ்டம்" என்னும் வாக்கியத்தைச் சொன்னான். அவ்வளவிலே பைசாசம், இவனை வெல்லுதலரிது எனச் சிந்தித்துச் சந்தோஷித்து, பக்தாவெனக் காளிதாசனை அழைத்து, உனக்கு வேண்டுவதைக்கேள் தருதும் என்றது. அதற்குக் காளிதாசன், நீ இவ்விடம் விட்டகல்வதே எமக்குவேண்டிய வரமென்ன, அது நன்றெனக்கூறி அங்குநின்றும் அகன்று போயது. இதனைக்கண்ட அரசன் ஆச்சரியவசத்தனான்.

இதன்பின்னர் ஒருநாள், அரசன் ஸ்நானத்தின் பொருட்டுத் தனக்குரிய பூந்தடாகத்துக்குப் போய்ப் படித்துறையில் நின்றான். அப்போது, அரசனுடைய பூசைக்காகவே தீர்த்தமெடுத்துப் போக வந்த அந்தப்புரத்துச் சேடியொருத்தி, அரசனைக் கண்ணுற்றுக் காமலகரியால் தன்வசந்தப்பி இடையிற்றாங்கிய தங்கக்குடத்தைச் சோரவிடுத்தாள். அஃது அப்படித்துறையில் விழுந்துருண்டோடும்

போது, டம்டம் டடண்டம் டடடண்டமென்னு மொலியுடன் ஓடிற்று. அவ்வொலிக்குறிப்பை அரசன் மனனம்பண்ணிக்கொண்டு ஸ்நானாதிகளை முடித்துச் சபைக்குப் போய்ச்சேர்ந்தான். அங்கே காளிதாசன் வந்திருப்பக்கண்டு அவனைப்பார்த்து, அவ்வொலிக் குறிப்பை மாத்திரஞ்சொன்னான். அதனைக்கேட்ட காளிதாசன். நிகழ்ந்தவற்றையெல்லா முடன் நின்று கண்டான்போன்று சொன்னான்.

மன்னன்மேல் வைத்தவிழி வாங்காம னீர்த்தாதி
நன்னீர்க் குடத்தை நழுவவிட்டாள்—பொன்னந்
தடஞ்சூழ் படிக்கட் டடடம்ட டம்டம
டடடமடடம்ட மெழ.

இச்சுலோகத்துக்கும் அரசன் அக்ஷரத்துக்கு லக்ஷமேரையாகவே பொன்னை வாரிப் பரிசாக வழங்கினான், இவ்வாறே காளிதாசன் நாள்தோறும் திண்மை நுண்மை வனப்பாதிகளாற் சிறந்த சிங்காரகவிகள் சொல்லி அரசனை மகிழ்வித்து அவனிடம் குவை குவையாகப் பொன்னைப் பரிசாகப் பெற்றுவந்ததுமன்றி, இடையிடையே அநேக நூல்களையும் இயற்றிவந்தான். நாடகாலங்காரத்திலும் காளிதாசன் வல்லவன் என்பது அவனாலியற்றப்பட்ட சகுந்தலைநாடகம், விக்கிரமோர்வசிநாடகம், மாளவிகாக்னிமித்திர நாடகம் முதலியவற்றா லுணரப்படும். மற்றை எப்பாஷையிலும் அவ்வகைச்சிறந்த நாடகநூல் கிடையாவென ஆன்றோர் கூறுப.

பௌராணிக ரூபமாகச் செய்யப்பட்ட நூல்கள் இந்நூற்றொடக்கத்திலே கூறப்பட்டன காண்க. தோத்திரரூபமாக இயற்றப்பட்டநூல்கள், சியாமளாதண்டகம், கவுரிசதகம் முதலியன. கருவிநூல்களாக இவனாலியற்றப்பட்ட நூல்கள், சுருதபோதம், நானார்த்தசப்தரத்தினம் சந்திராலோகம் 'முதலியன. இவையேயன்றி சமய நூல்களாகவியற்றப்பட்டன சுத்தசந்திரிகா வியாக்கியானம் முதலியன.

போஜனுடைய பிரியகவிகள் காளிதாசன், பவபூதி, தண்டி என்னும் மூவரே. இவருள் காளிதாசனே சிரேஷ்டநண்பன். இவன் இற்றைக்கு ஆயிரத்துநானூறு வருஷங்களுக்கு முன்னர் இருந்தவன் என்பது அநேகர் துணிபு.